198

198

# குடி வாழ்க்கை

PLATO'S REPUBLIC

கே. ராஜகோபாலாச்சாரியார்



வ[illegible]தரம் வெளியீடு

W
N47
105124

# குடி வாழ்க்கை

(பிளேட்டோ)

கே. ராஜகோபாலாசாரியார்
கலாநிலயம்

வந்தே மாதரம் வெளியீடு

விலை ரூ. 1—4—0.

முதல் பதிப்பு மார்ச்சு 1947.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 105124
MADRAS

Published by the Mercantiles Ltd,.
Proprietors of Vandemataram Publications,
19, Meeran Sahib St., Madras.—2.

W
N47

OUR SOLE-SELLING AGENTS
*SWATHI TRADING CO.*
43, General Muthia Mudali St.,
Madras—1.

Printed, at the Adal Padal Press,
Q. H. M. S. 491—1100—3—47.

# முன்னுரை

இற்றை நாள் எல்லோரும் எங்கெங்கும் பெரியதோர் உழைப்பினில் பொருந்தி யிருக்கக் காண்கின்றோம். அந்த உழைப்பு முன்னேற்ற உழைப்பு என்ற பேர் பெறுகின்றது. தேசம், சாதி, மொழி, தொழில் ஆகியவற்றின் முன்னேற்றம் என்று முழங்கினராய் உடலும் உயிரும் தேய இடைவிடாது உழைத்து வருகின்றனர்.

அவ்வழி உழைக்கும் தொண்டர்களில் பெரும்பாலோர், பேர், புகழ், மாலை, இலாபம் முதலியவற்றில் மனம் வைத்து முயல்பவர் அவர்களில் வஞ்சனை சிறிது மின்றிப் பொதுநலமே கருத்தாக மெய்யே முயல்வோரும் உளர். மெய் வருத்தம் பாராமல், பொருள் அழிவு கருதாமல், சுய ஆக்கம் நாடாமல் உழைக்கின்றவர் ஆவர் அவர்.

ஜனநாயக அரசாங்க முறையினாலும், பொருளாதாரத் திட்டங்களாலும், தொழில் முறைச் சட்டங்களாலும், ஜனங்களை நோய் வறுமை இல்லாமலும், சந்தோஷத்துடனும் வாழச் செய்யலாம் என்பது அவர்களது முற்றிய நம்பிக்கை.

அத்தகையாரில் ஒருவர் சமீபத்தில் விஞ்ஞானிகளின் கூட்டத்தில், "வயிறு பசித்துக் கிடக்கையில், வறுமையும் நோயும் வாட்டிக் கொண்டிருக்கையில், கடவுளும் மதமும் தத்துவ நூல்களும், யாருக்கு வேண்டும்?", என்னும் கருத்தில் தலைமையுரை வழங்கினர்.

அவரோ சிறந்த அறிஞர் என்று கொண்டாடப் பெறு கின்றார். எனவே, இவ்வுரையை நெருங்கிப் படித்தோம். "வயிறே வாழ்வு, அதற்கொன்று தேடுவதே செய்வதற் குரிய கருமம். யாககைக் குரியன எளிதே கிடைப்பதற்கு உரிய வழி அரசாங்கமும் மக்களும் முயல வேண்டும்." என்பதே அவ்வுரையின் பிண்டப் பொருள் என்று பட் டது.

இந்த யாக்கைச் செய்தி முடிவில்லாத கவந்தப் பசி யைத்தான் வளர்த்து வைக்கும். வயிற்றின் நிறைவும், திருப்தியும், சந்தோஷமும், இந்த யாக்கை முயற்சியால் எங்கும் எந்நாளும் கைவாரா என்பதையே சரித்திரம் காட் டித் தருகின்றது. இந்நாள், இந்நாட்டு அரசியல் வித்தகர்கள் விழையும் ஜனநாயக அரசியலும், யாக்கை முயற்சியும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் நிகழக் காண்கின்றோம். வாழ்க்கைக்கே உரியவான அமைதியையும் இனிமையை யும் அங்கு மக்கள் பெற்றிருப்பதாக எமக்குத் தெரியவில்லை. ஆனால், எச். ஜி. வெல்ஸ் என்பவர் வேறுவழி கூறுகின்றார். அவரைச் சிறந்த அறிவாளி என்றும், விஷயங்களை நெடுந் தூரம் நோக்கவல்ல தூரதிருஷ்டியும், மதி நுட்பமும் உடையவர் என்றும் இந்நாள் உலகம் பாராட்டுகின்றது. அவர், இற்றைக்கு 15 வருடங்களுக்கு முன் எழுதிய நூல் ஒன்றில் கூறுவார்:—

"For the first time in History over the large parts of the Earth, the beating of the inferiors has disappeared. For the first time in History, the common worker has leisure assigned to him as his right. Never have

common people been so well-clad or so well housed. Never have they had so much freedom of movement. There has been an extraordinary increase in social gentleness. The comman man today is happier than he has ever been and with a clearer hope of continuing betterment. The common man in quite a little space of years may be better off than are even the fortunate-few today."

இவ்வுரையின் பொருட் சுருக்கம் வருமாறு:—தாழ்ந்தோரையும், எளியாரையும் வருத்துதல் என்பது இங்கிலவுலகத்தின் பெரும பாகத்தில் இப்பொழுது அகன்றது. இப்பொழுது சாதாரண மனிதன், தனது உரிமையாக ஒய்வெனும் நலத்தினைப் பெற்றுள்ளான். இன்று அவன் நன்றாக உடுக்கின்றான். வசதியுடைய வீட்டில் வசிக்கின்றான். இச்சைவழி நடந்து கொள்ளும் அவனது சுதந்திரம்—இதற்குமுன் அவன் பெற்றிராத சுதந்திரம்—இன்று அவனது ஆயிற்று. மனித நடமாட்டத்தில், ஒருவருக்கொருவர் சமத்துவத்துடனும் நட்புடனும் ஒழுகிக் கொள்ளும நலம் இப்பொழுது அதிகரித்து வருகின்றது. சாதாரண மனிதன் இன்மேற சந்தோஷம் உடையவனாய் இருக்கின்றான். இந்த அவனது சந்தோஷம் இனியும் மேலோங்கி வளரும் என்பதற்கு உரிய குறிகள் காணக் கிடக்கின்றன. இன்னும் சில வரு-- கர்லத்தில், இடம் பொருள் ஏவல் ஆகிய வசதியுடைய சிலரினும் சிறக்க அவன் வாழ்தல் ஆகலாம்."

இன்னபடி மகிழ்வின் விம்மிய வெல்ஸ் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மனந் தளர்ந்து மாழ்குவதைக் காண்போம்:—

......Most of our rulers and directors are, to put it plainly, narrow minded self-centred, mentally indolent, pompous and pretentious creatures of the past. They are unwilling to put their minds through the humble and strenuous mental toil needed to raise the standard of their work and we others are fools enough to tolerate the mismanagement. These ruling and controlling people have got enough for themselves, they stick to the controls like barnacles, they live in relative comfort and immense dignity cheerfully engaged in the defence of their conceit and they do not care a rap, what happens to the mass of us; and the mass of us lacks the spirit, will and understanding to call them to account. A thousand million human beings are leading lives of want, limitation, humiliation and toil; scores of millions are in immediate danger of the futile tortures of war, and these dull self protecting folk at the head of things and in control of things do nothing of what they might do and pose for our respect and admiration with infinite self complacency."

இவ்வுரையின் கருத்து வருமாறு:—"ஐயகோ, ஏழையினரான பொது ஜனங்களுக்கு நற்காலம் பிறக்கவில்லையே. பசியும், பிணியும், ஓய்வில்லாத உழைப்பும் இலக்ஷக் கணக்

கான ஜனங்களைப் பிடிக்கின்றனவே. கொடிய போரும் விரைந்து தொடரும் போலிருக்கின்றதே இக்கொடுமை களிலிருந்து ஜனங்களுக்கு விமோசனம் இலதோ! ஜனங் களை ஆளும் கூட்டத்தார தமது ஆக்கமே கருத்தாக இருக் கின்றார்களே யொழிய, சாதாரண ஜனங்களின் வாழ்க்கை சிறக்கும் வழி முயல்கின்றார்கள் இல்லையே. ஆள்பவர் அவ்வாறாக, ஜனங்கள் நடமாடும் பிணங்களாய் வாடி வருந் துவதோ!''

ஜனங்களின் சுகமும் சந்தோஷமும் பெருகி வருகின்றன என்று மகிழ்வின் பெருகிய இவ்வறிஞர், நான்கு வருடங் களுக்குப் பின் இப்படி அழுங்குவானேன்? நான்கு ஆண்டு களுக்கு முன் பெருகி வளர்ந்த இன்பம், நான்கு ஆண்டு களில் காணாது ஒழிவானேன்? ஆட்சி முறையை நடத்து பவர் குற்றம் என்று கடிவதால் பயன் இல்லை. இது யாவர் குற்றமும் அன்று. ஜன நலத்திற்கு ஆதாரமாக அரசாங்க அமைப்பையும், பொருளாதார முறையையும் கருதுவதால் ஏற்படும் பிழை இது.

யாக்கைச் செய்தி எந்நாளும் யாவர் மாட்டும் சந்தோ ஷத்தைத் தந்ததில்லை; தருகின்ற தன்மையும் அதனி டத்தில் இல்லை. அது பசியைத்தான் வளர்த்து வைக்கும். நல்லவர்க்கு வயிறு பசியாது. பசித்தாலும் வயிற்றுக் கொன்று கேட்க மாட்டார். அம்மேன்மக்கள் வயிறு வாடாதபடி காக்கப் பெறும்.

வித்தகர் பிளேட்டோ கூறுவதுபோல் தத்துவ அறிவு படைத்த மேன் மக்களின் தொகை பெருக வேண்டும். நெஞ்சத்து நல்லராய் வாழ்கின்ற நிலையிலும், தமக்குரிய

கருமங்களைக் கடமையெனச் செய்து அமைகின்ற நிலையிலுமே சந்தோஷம் எழுகின்றது.

சந்தோஷம் என்பது மனத்தைப் பற்றி செய்தியாதலால், அரசாங்க முறையினாலும், சட்ட திட்டங்களாலும் அதை இசைத்துவிட முடியாது. வாங்கிப் பெருகின்ற சரக்கும் அன்று அது. நன்கு வாழ்கின்ற நல்லவரின் நன்மையில் சுரக்கும் தத்துவம் அது. கடவுளும், தத்துவ அறிவுமே நன்மையை நல்கி வைக்கும்.

எனவே, ஜனநலமே கருத்தாக விரைகின்றவர், சிறிது நின்று சிந்தித்தல் நலம். சாக்ரிடிஸ், பிளேட்டோ போன்ற பெருமக்களின் அறவுரையில் தோய்ந்து கருதல் அவசியமாகும்.

இந்நூல் முதலில் கலா நிலயம் என்னும் பத்திரிகையில் மொழி பெயர்த்துப் பிரசுரிக்கப் பெற்றது. வந்தே மாதரம் வெளியீட்டார் விழைவின்படி, இதை மறுமுறை பரிசோதித்து தந்தோம்.

கே. ராஜகோபாலாச்சாரியார்

கலா நிலயம்.

# சாக்ரடீஸ்

இன்றைக்கு இரண்டாயிர வருடங்களுக்கு முன், சாக்ரடீஸ் என்னும் வித்தகம் முதிர்ந்த பெரியோர், கிரீஸ் தேசத்தில் ஏதன்ஸ் என்னும் நகரில் வாழ்ந்து விளங்கினர். அவர் கற்சிலை செய்யும் ஒரு சிற்பியின் மகன்.

அவர் இளமையில், அக்காலத்து வழக்கத்திற்கு இணங்க, சங்கீதமும், உடற் பயிற்சியும் பெற்றார். வயது வந்தபின், அவர் மனம் தத்துவத்துறை நாடவே, கணித சாத்திரம் வான சாத்திரம், இலக்கியம், தத்துவ சாத்திரம் முதலியவைகளை ஆழ்ந்து கற்றார்.

வயிறு வளர்ப்பதற்காக அவர், தனது தகப்பனது தொழிலைச் சில காலம் நடத்தி வந்தார். அந்நாள் பயின்ற மானுட வாழ்க்கை, அவரைச் சிந்தனைக்குள் ஆழ்த்தியது. அரசியல் வாதிகளும், சோபிஸ்ட்டு என்று அழைக்கப்படும். விதண்டாவாதக் குழுவினரும் மக்களின் மனதைக் கெடுத்து வந்தனர். நியாயமும், தர்மமும், இனிமையொடு அமைதியும் மனித வாழ்க்கைக்கு அயலாயின.

இதனைக் கண்ட அப் பெரியார் மனம் வருந்தியது. சிற்பத் தொழிலை விடுத்தார். "நீதியும் தர்மமும் என்ன என்பதை மக்களுக்கு எடுத்துப் போதித்து, அவர் உய்யுமாறு செய்." என்று கனவிலும், குறிகள் மூலமும், அசரீரியாகவும் கடவுள் தன்னைத் தூண்டுகின்றார் என்னுமோர்

உணர்ச்சி அவர்பால் எழுந்து வன்மையோடு வளர்ந்து வரலாயிற்று.

அதன்பின் செல்வம், சுகம், அதிகாரம் என்பவற்றைத் தன் கருத்தினின்று அகற்றினர். காலிற்குச் செருப்பும் இல்லா ஏழையாயினர். மானத்தை மறைப்பதற்கு வேண்டியதான நான்குமுழத் துணியுடன், கடவுளது ஆணையைச் செய்து முடிக்கத் தெருக்களில் கிளம்பினர்.

தெருக்கள் தோறும், கடைகள் தோறும், நால்வர் கூடும் இடங்களிலும், வீடுகள் தோறும், தர்மோபதேசம் செய்வதே கருமமாகக் கொண்டு, தம் வாழ்நாளின் பெரும் பாகத்தைக் கழித்து வந்தார். எளிமையும், தூய்மையும் உடைய வாழ்க்கையர் அவர். பொய்யின் பெயரையும் அறியாத செம்மையர். கடவுளிடம் நிறைந்த பக்தி உடையவர். ஒருவருக்கு மறந்தும் அவர் தீமை செய்ததில்லை. சலிக்காத முயற்சியும், பொறுமையும் உடையவர். இவரனைய பேரறிஞர் வேறு ஒருவர் இவ்வுலகத்தில் எங்காணும் இருந்ததில்லை என்னும் புகழ் பெற்றவர். டெல்பியில் கோயில் கொண்டுள்ள அறிவுத் தெய்வம், 'இவரே பேரறிஞர்' என்று பிரிநிலையோடு தேற்றமும் சேர்ந்த ஏகாரத்துடன் கூறியதாம்.

அவர் உலகினுக்கு மெய்யறிவைப் புகட்டி வந்தாரேனும், புதிய மதத்தையோ தத்துவ முறையையோ நிலைநாட்ட நினைக்கவில்லை. இருப்பன அமையும் எனும் கருத்துடைய அவர், ஜனங்கள் பொய்யை மெய்யென்று உழல்வதை அவர்களுக்குத் தெரியக் காட்டியும், மெய் வாழ்க்கை இன்னது என்பதைத் தெளியவைத்தும் வந்தார்.

அவர் வாழ்ந்த காலத்தில் ஏதன்ஸ் நகரம் குடியரசாக இருந்தது. இந்த அரசாங்க முறையின் பயனைப் அரசியல் கட்சிகள் பல எழுந்து ஜனங்களைக் குழப்பின. குடியரசாயினும், அறிவும் ஆற்றலும், அந்தஸ்தும் உடைய சில ரது கையில்தான் அரசாங்கம் இருக்கவேண்டும் என்பர் ஒரு சாரார். முற்றிலும் கலப்பற்ற பொது ஜனநாயகமே வேண்டுமென்று கூறுவார் மறுசாரார். இவர்களுக்கு இடையில் மேலே கூறிய இரண்டு கட்சிக் கொள்கைகளி லும் சிறிது சிறிது எடுத்துக்கொண்டு, இக்கட்சியே நாட்டை ஆள்வதற்குரியது என்றனர் வேறு சிலர். இக்கட்சி மிதவாதக் கட்சி என்ற பெயர் பெறலாயிற்று. இம்மூன்று கட்சியினரும் சேர்ந்து கொண்டு நாட்டைக் குலைத்து வந்தனர். நல்வாழ்க்கை அகன்றது. கட்சிப் பூசலும், கோபமும், பகையும் தலைவிரித்தாடின.

இந்த மூன்று கட்சியினரும் மாறி மாறி அரசாங்க அதிகாரம் வகிக்கலாயினர். கட்சிக் கொள்கைக்கு ஏற்றபடி அரசாங்கம் அமையலாயிற்று. இன்று அரசாங்கத்தை நிர்வகிப்பவர் மற்றக் கட்சியினரை நசுக்கினர். இப்படி அரசாங்கம் நாட்டை நரகம் ஆக்கியது.

பெருமகன் சாக்ரடீஸ் எந்தக் கட்சியிலும் கலந்து கொள்ளவில்லை. இக்குழப்பத்தைக் கண்டு கலங்கிய அவ் வித்தகர் ஒரு முறை கூறியதாவது :—

> " சாமர்த்திய சாலிகள் நமக்கு வேண்டாம். அவர்களால் நன்மை யொன்றும் எற்படாது. சோம்பித்திரிவதற்குரிய சாமர்த்தியத்தை என் வாழ்நாளில் நான் எப்பொழுதும் பாராட்டியதில்லை. செல்வம், செல்வாக்கு,

முன்னேற்றம் என்றும், உத்தியோகங்கள் என்றும், சட்டசபையில் பேசுவது என்றும், கட்சிச் சூழ்ச்சிகள் என்றும் கூறப்படுபவை, மக்களின் மனத்தைக் கவர்ந்தன. அவைகளை நான் ஒரு பொருளாக மதிக்கவில்லை. மானமில்லா மக்கள் கைக்கொள்ளும் வழி இது. இவ்விதம் வாழ நல்ல என் மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லை. உண்மையில் எனக்கேனும் மற்றவர்க்கேனும் எவ்வித நன்மையும் நல்குவதற்கு இல்லா இத்துறையில் என் மனம் நாடுமோ'

இக்கட்சிக் கொடுமையில் கலந்து கொள்வதற்குப் பதிலாக இந்நகர வாசிகள் ஒவ்வொருவரிடமும் சென்று 'ஐய, உன்னை நீ சோதித்துப்பார். உன்னை நீ நல்லவனாகத் திருத்திக்கொள். பணம் அதிகாரம் முதலியவைகளை நாடுமுன், தர்மத்தையும் ஞானத்தையும் அடைய முயற்சி செய்.' என்று வற்புறுத்தி வந்தேன்... நான் பொதுஜன நலமென்று கூறப்படும் அரசியல் கட்சி வாதத்தில் ஈடுபட்டு, தர்மத்தையும் நடத்தி வைக்க முயன்று இருப்பேனாயின், என்னை இவ்வளவு காலம் உயிரோடு இருக்க விட்டு வைத்திருப்பார்களா? நானாகட்டும், மற்று வேறு யார்தான் ஆகட்டும் தர்ம நியாயங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர் பொதுஜன ஊடாட்டத்தில் நெடுநாள் நிலைத்திருக்க இயலாது என்பது நிச்சயம்."

இவ்வாறு அப்பெருமகன் தன் நண்பர்களிடம் ஒரு முறை கூறியுள்ளதாக அறிகின்றோம். அவர், எந்தக் கட்சியிலும் சேராமல் ஒதுங்கி நின்றும் ஒவ்வொரு இடமாகச் சென்றும், "ஐய, உங்களைப் பற்றியும் உங்களது உடைமை அந்தஸ்து பற்றியும் நினையாதீர். உங்கள் ஆன்மா நற்கதி அடைய வேண்டிய நெறியில் நடப்பதே உங்கள் நோக்கம்' ஆகட்டும். செல்வமும், அதிகாரமும்

ஒருவனுக்கும் நற்குண நற்செய்கைகளை அளிக்க மாட்டா. தர்ம சிந்தனைதான் மனிதன் அடைதற்குரிய தனம். அந்த தர்ம சிந்தனையை உங்களதாகப் பெறமுயல்வீர்.'' என்று முழங்கலானார்.

இந்த அற முழக்கம் ஏதன்ஸ் நகர மெங்கணும் பரவலாயிற்று. நகரத்திலுள்ள இளைஞரின் மனம் அவரது உரையினால் கவரலாயிற்று. இளைஞர் அனைவோரும் இவரைத் தொடர்ந்தனர். வியாபாரத்துறையில் ஈடுபட்டிருந்த சிலர், வியாபாரத்தை விட்டு விட்டுத் தத்துவத் துறையில் படிந்தனர். பொருள் சேமித்தலே வாழ்க்கையெனக் கொண்டிருந்தவர்களான அவ்வாலிபர்களின் தந்தைமார், சாக்ரிடிஸினிடம் பகை கொள்ளல் ஆயிற்று.

'அரசியல் வாதத்தில் தர்மத்திற்கு இடம் சிறிதும் இல்லை.' என்று அவர் இடைவிடாமல் கூறி வந்தது, அரசியல் வாதிகளின் கோபத்திற்கு அவரை ஆளாக்கியது.

மேலும், அவர், புலவர், வித்தகர், அரசியல் வாத நிபுணர் என்று சொல்லிப் பெருமை பாராட்டிக் கொள்பவரிடம் சென்று, அவர்களுடன் வாதம் செய்து, அவர்களது கலப்பற்ற அறியாமையை மறுக்க இயலாவழி விளக்கவே அவர்களும் சாக்ரிடிஸைப் பகைத்தனர்.

இப்படியே, இப்பெருமகன் எழுபது வருஷங்களைக் கழித்தார். இவரைத் தெய்வாம்சம் என்று பாராட்டினர் பலர். ஆனால் பெரும் பான்மையோர் இவரிடம் பகை கொண்டனர். எனினும், எல்லோரும் இவரை வியந்தனர். பொதுஜன இயக்கங்களிலிருந்து இவர் விலகி வாழ்ந்தா

ரேனும், மக்கள் நலமே கருத்தாக, இந்த இயக்க விவகாரத்தில் அவர் தமது கடமையைச் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அப்பொழுது, பொதுஜன அபிப்பிராயத்திற்கு எல்லாம் எதிராகத் தர்ம நியாயத்தையே எடுத்துக் கூறினர். இதனல் இவரிடம் கோபங் கொண்டனர் பலர். சாக்ரிடிஸுக்கு எழுபதாவது ஆண்டு நடக்கையில் ஏதன்ஸ் நகர அரசாங்கத்தில் மாறுதல் ஏற்பட்டது. கலப்பற்ற ஜனநாயகப் பிரதானக் கட்சியார், (The Unmixed Democratic Party) அரசாங்கத்தில் அதிகாரம் வகித்தனர். சாக்ரிடிஸை வெறுப்பவர் பலர் அக்கட்சியில் இருந்தனர். அவர்கள் சாக்ரிடிஸை அடக்க எண்ணங் கொண்டு, அதற்கு வழி தேடினர்.

வழியும் அகப்பட்டது. பிராசீன மதக் கொள்கைகளையும், வழக்கங்களையும் மறுத்துத் துர்போதனை செய்கின்றார் என்றும், பெற்றோர்க்கு அடங்காமல் இளைஞர்களைக் கெடுக்கின்றார் என்றும் சாக்ரிடிஸின்மேல் குற்றங்கள் சாற்றி அவரை விசாரணைக்கு கொண்டுவந்தார்கள்.

விசாரணை நடந்த பொழுது அவர் தமது சார்பில் தனது குற்றமில்லாமையை ஈடற்ற வழி வற்புறுத்தினர். ஆனல், நியாதிபதிகள் குற்றவாளி என்ற தீர்ப்புக் கூறினர். மரண தண்டனையும் விதிக்கப் பெற்றது.

விசாரணை காலத்தில் சிறிது அடங்கிப் பேசியிருப்பாராயின், ஒரு வேளை அவர் மரணதண்டனையிலிருந்து தப்பியிருக்கலாம். நியாய சபையிலும், அவர் நியாயாதிபதி உள்பட எல்லோருடைய அறியாமையையும் அவர்கள் வியக்கும் வண்ணம் எடுத்துக்காட்டினர். ஆயிரம் முறை தான் சாக வேண்டி நேர்ந்தாலும், தான் செய்ததைத் தவிர

வேறு எதுவும் செய்வதற்கு இல்லை என்று இறுதியாகக் கூறிவிட்டார்.

அவர் சிறையில் இருந்த காலத்தில் அவரது உற்ற நண்பர்களும் சீடர்களும் அவரைச் சிறையினின்று தப்பு விக்க முயன்றனர். ஆனால் சாக்ரிடீஸ் சிறை தப்பவில்லை. "மரணம் நேருவது ஒருவரது நன்மைக்கோ தீமைக்கோ என்பதை நாம் அறியோம். ஆதலின் விதிக்கப் பெற்ற தண்டனையை ஏற்பதே முறை" என்று கூறி, கொலையாளிகள் நீட்டிய விஷத்தை அமைதியோடு குடித்துத் தமது மண்ணுலக வாழ்வைத் துறந்து முத்தியில் நிறைந்தார்.

இது இப்பெரு மகனது வாழ்வு. இன்றும் அவரை இவ்வுலகம் வியந்து போற்றுகின்றது. அவரது சீடர்கள் பலரில், பிளேட்டோ முதல் சீடர் ஆவர். தனது குருதேவரின் அடிபற்றி வாழ்ந்தவர். அவர் தமது குருதேவரின் கருத்துக்களைத் தொகுத்து, இக் குடிவாழ்க்கை என்னும் நூலை ஆக்கியுள்ளார்.

அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டுவரும் இந்நாள், நம் தமிழ்நாட்டார் இதனைப் படித்தல் நலம் மிகச் செய்து வைக்கும். அந்தப் பெருநூலைத் தழுவிய மொழிபெயர்ப்பே, யாம் தந்த இந்நூல். இது கலா நிலயம் என்னும் வார இதழில் முன் பிரசுரிக்கப் பெற்றது.

கேயார்.

கலா நிலயம்.

# வள்ளுவர் நல்கும்

# காமச் சுவை

சுவையின் சுவை காமச் சுவை. இச்சுவையினை அருளுபவர் பொய்யா மொழியார். எனின் அது நலம் பெரிது செய்யவல்லதாகும். பொருள் தொடர்பின்றி உவக்கவும், அதன்பயனைய் ஆன்ம விளக்கம் ஏற்படவும் இந் நூல் உதவும் தன்மையது.

சிற்றின்ப நசையை அகற்றி கடவுள் இன்பத்தில் சேர்த்து வைக்க வல்லது இக்காமச் சுவை என்பதைக் கலா நிலயத் தலைவர் ஸ்ரீ. கே. ராஜகோபாலாசாரியார் ஈடிலா வழி நிறுவிக் காட்டுகின்றார்.

தமிழ் நாட்டார் இப்பெரு நூலைப் படிக்க வேண்டுவது மிக அவசியம். ஆணும, பெண்ணும், பண்டிதரும் பாமரரும் இதனைப் படித்துப் பயன் பெறுவார்களாக.

உயர்ந்த பயிண்டு, நாலு வர்ண ஜாகட், மூவர்ணப் படங்கள். விலை ரூ. 5-0-0

## ஸ்வாதிப் பதிப்பகம்

ஜெனரல் முத்தையா முதலி தெரு

MADRAS-1.

# குடிவாழ்க்கை

## பிளேட்டோ

### 1

அமைதியோடு இன்பமும், மற்றுள எல்லா நலன் களும் ஒருங்கே வாய்ந்து மக்களனைவரும் இனிதே வாழு மாறு குடிமுறை அமைவது எங்ஙனம் என, கிரேக்க வித்த கர் ஸாக்ரடீஸ் என்பவரின் முதற் சீடரும், அறிவினது எல்லையை எய்தி நிற்பவரென்று கருதப்படுபவரும் ஆகிய பிளேட்டோ என்பவர், நிரந்தரம் இவ்வுலகினில் நிலைநிற்கு மாறு வரைந்துள்ள நூலினைப் பயின்று அறியாதார் யாதொன்றும் அறியாதாரே. அவ்வரிய நூலினை முற்றிலும் தமிழில் மொழி பெயர்த்து ஆராய்தல் என்பது அருமை யினும் அருமையாகும்.

ஆயினும் அப்பெரிய நூலின்கண் என்ன என்ன செய்தி கள் ஆராயப் பெற்றிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்வது, மாந்தர்தம் சிந்தனையைத் தெளிவு செய்து நிரந்தரமான உண்மை நெறியின்பால் அவரை உய்ப்பதற்குப் போதிய உதவியாகும் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை. ஆதலின், இந்நூலில் பிளேட்டோவின் முற்றிய முடிவுகள் மாத்திரம் எடுத்து மொழிபெயர்த்துத் தரப்படுமே யன்றி அம்முடிவிற்கு வந்த காரணங்கள் விரிவாய் ஆராயப்பட மாட்டா.

சாக்ரடீஸ் என்னும் வித்தக எல்லையை எட்டிய பெரியார், வாழ்க்கை முறையின் தத்துவத்தைப் பற்றித் தமது உற்ற நண்பர் சிலருடன் வார்த்தையாடும் முறையில் பிளேட்டோ என்பவர் தம் கருத்தை அவர் எழுதிய குடி வாழ்க்கை என்னும் நூலில் (Plato's Republic) ஈடற்ற வழியில் விளக்கி வைத்துள்ளார். இனிக் கருத்தின் செம்மை நிறைந்த இந்நூலினுள் சென்று அது நல்கும் திப்பிய கருத்துக்களை ஓதி மகிழ்வோம்.

ஒரு நாள், சாக்ரடிஸ், சிபாலஸ் என்னும் தமது வயோதிக நண்பருடன் வார்த்தையாடிக் கொண்டிருக்கின்றார். அவ்வேளை அந்நண்பர், 'உடைமைகள் பழுதற்ற சந்தோஷத்தை அளித்து விடா'. என்றும் 'ஓரஞ்சாராத நியாயமே நல் வாழ்க்கையின் இலக்கணம்.' என்றும் கூறினர். இது கேட்ட சாக்ரடிஸ், நியாயம் என்பதைச் சிறிது விளக்குமாறு கேட்டார். அன்னதற்கு, அவ்வயோதிக நண்பர், "சைமோனடீஸ் என்னும் அறிஞர் கூறுவதுபோல், உண்மையைப் பேசுவதும், வாங்கின கடனைத் திருப்பிக் கொடுப்பதும் நியாயத்தின் விளக்கம், என்று மொழிந்தார். இதனைத் தொடர்ந்து, நியாயம் என்பதின் முற்றிய விளக்கதைப் பெறுதற்கு, அயலிருந்த மற்ற நண்பர்கள் முயல்கின்றனர். அப்பொழுது சாக்ரிடீஸ் எடுத்துக் காட்டும் உண்மைகளே இந்நூல்.

வாங்கின கடனைத் திருப்பிக் கொடுப்பது நியாயம், எனின், நல்ல புத்தியோடு இருக்கும ஒருவனிடமிருந்து கடனாக வாங்கிய கத்தியை, அவன் புத்தியின் ஸ்வாதீனம் இழந்திருக்கும் நிலையில் திருப்பிக் கொடுத்தல் கூடுமா? வாங்கின கடனைத் திருப்பிக் கொடுத்தலே நியாயம் என்று

கூறியவரான வித்தகர் சைமோனடீஸின் கருத்து இதுவா கத்தான் இருக்குமா? நட்பில்லாதவர் கையில் இருக்கும் வாள் தீமை புரிய வல்லது அல்லவா? எனவே, "எது தீமை யைத்தராமல் இருக்குமோ, அவ்வழியில் நியாயத்தைச் செய்வது,' என்பது அவ்வித்தகர் கருத்தாய் ஒருவேளை இருக்கலாம். அதாவது, நண்பருக்கு நன்மையையும், விரோதிகளுக்குத் தீமையையும் செய்வது நியாயம் என்று பெறப்படுகின்றது. அப்படியானால், நன்மையையும், தீமை யையும் நியாயம் என்பது புரிவதாகின்றது. அதாவது, ஒருவ ரோடு உறவுகொண்டும், வேறொருவரோடு பகைகொண்டும் நியாயம் தன்னை நிகழ்த்திக் கொள்வது ஆகின்றது.

நியாயம் பயிலும் முறை இதுவாயின், பகையொன் றும் இல்லாமல் அமைதி நிலவியுள்ள காலத்தில் நியாயத் திற்கு இடம் இல்லாமல் போகின்றது அல்லவா? போரும் பகையும் ஒழிந்து அமைதி நிலவி யிருக்கும் காலங் களில், பொருள் விஷயமான ஒப்பந்த ஏற்பாடுகள் செய்து கொள்வதற்கு, நியாயம் உபயோகமாக இருக்கும் என்று சொல்லலாம் இத்தகைய ஒப்பந்த ஏற்பாடுகளில் நியாய மானவன் எவ்வாறு மற்றவனைக் காட்டிலும் உபயோக முள்ளவனாய் இருக்கின்றான்? என்று பார்க்க வேண்டும். பொருளிற்கு நஷ்டமும் பயனும் இல்லாதிருக்க வேண்டிய பொழுது, நியாயமானவன் உபயோக முள்ளவனாய் இருக் கிறான்: அதாவது, பணம் உபயோகமற்றதாகும்பொழுது நியாயம் உபயோக முள்ளதாகின்றது."

இன்னும் சிறிது நெருங்கிப் பார்ப்போம். அமைதி யான நிலை நிலைப்பதற்கு, அதற்கு எதிரான போர் பூசல்களை அகலச் செய்தல் அவசியம். எனவே யுத்தக் கலையைப்

போல், நியாயம் எதிர்க்கவும் தற்காத்துக் கொள்ளவும் திருடவும், திருடப் படாமல் காத்துக் கொள்ளவும் துணை புரிவதாகின்றது. எனவே, இந்த முடிவிற்கு சைமோனடீஸின் நியாய விளக்கம் வந்து சேருகின்றது. திருடுதல் நண்பர்களின் நன்மைக்கும், பகைவர்களின் கேட்டிற்கும் புரியப்படுவது ஆகலாம் என்றும், எனவே அது நல்ல செயல் என்றும் கூறப்படலாம். உண்மையே; ஆனால் இது மற்றொரு கேள்விக்கு இடந்தருகின்றது.

'நண்பருக்கு நன்மை, பகைவருக்குத் தீமை,' என்ற வாசகத்தைச் சிறிது ஆழ்ந்து கருதவேண்டும். நண்பரையும் விரோதியையும் நாம் எவ்வாறு விளக்கிக் கொள்கின்றோம்? நண்பர்களை உண்மையான நண்பர் என்றும் நண்பர் போன்ற தோற்ற முடையவர் என்றும், விரோதிகளை உண்மையான விரோதிகள் என்றும் விரோதிபோன்ற தோற்ற முடையவர்கள் என்றும், இருஇனத்தாராகப் பிரித்துக்கொள்ள வேண்டுமா? உண்மையான நண்பர்களோ அல்லது தோற்றமுடைய நண்பர்களோ யாரானாலும் நண்பர்களுக்கு நன்மையும்; உண்மையான விரோதிகளோ அல்லது தோற்றமுடைய விரோதிகளோ யாவராயினும் விரோதிகளுக்குத் தீமையும் புரிய வேண்டுமோ? அதாவது நன்மைக்கு நன்மை, தீமைக்குத் தீமை என்பது உங்கள் கருத்தா?

"ஐயா, உங்களது முடிவு அதுவாயின், தீமைக்குத் தீமைதான் புரிய வேண்டுமா? இப்படித் தீமைக்குத் தீமையே புரிவது மனிதனை இழிந்து, அவனைத் தீமையேயாய் முடித்து விடாதா? எங்காவது நியாயம் அநியாயத்தைச் செய்யுமா? உஷ்ணம் தண்மையைத் தருவ

துண்டா? எந்த அறிஞனும் எந்தக் கவிஞனும் தீமைக்குத் தீமை புரிவது நியாயம் என்று கூறமாட்டான் என்று நினைக்கிறேன். உடலின் உரமும் பணத்தின் செருக்கும் உடைய சிலரின் வார்த்தையே இந்த நியாய விளக்கம் என்று நினைக்கிறேன். நியாயம் எவர் மாட்டும் தீமை புரியும் தன்மையது அன்று. புரியின் அது நியாயம் என்ற பேர் பெறுவதற்கு இல்லை.'' என்று சாக்ரிடிஸ் முடிவு கூறுகின்றார்.

இப்படி சாக்ரிடிஸும் அவரது நண்பர்களும் வார்த்தையாடுகையில், 'நியாயமானவனா அல்லது அநியாயக்காரனா சந்தோஷம் அடைபவன்?' என்ற ஒரு கேள்வி எழுந்தது. அதற்கு விடையாக அவர் கூறுவார்.

ஒவ்வொரு கலையும் ஒவ்வொரு தனிச்சிறப்பை உடையது. அத்தனிச் சிறப்பின் விகசிதமே அக்கலையின் முடிவு. சந்தோஷந்தான் ஆன்மாவின் முடிவு. ஆன்மாவின் தனிச்சிறப்பான நியாயம் இறுதியில் சந்தோஷத்தைத் தருகின்றது. ஒரு மனிதன் ஒரு கருமத்தைச் செய்து முடிக்க ஆயுதங்கள் எப்படித் தேவையோ, அப்படியே சந்தோஷத்திற்கு நியாயம் கருவியாய் அமைகின்றது.

நன்மைகளை மூன்று விதமாகப் பாகுபாடு செய்யலாம். தன் அளவிலேயே விரும்பப் படுகின்ற நன்மை ஒன்று தன்னளவிலேயும், அதனால் ஏற்படுகின்ற முடிவினாலும் விரும்பப்படுகின்ற நன்மை இரண்டாவது. முடிவினால் மாத்திரம் விரும்பப்படும் நன்மை மூன்றாவது. இந்த மூன்று விதமான நன்மைகளில் நியாயம் இரண்டாவதில் வைக்கப்பட வேண்டும்.

ஒருவனுக்குத் தீமை செய்வது, செய்பவனுக்கு நன்மை பயக்கலாம். துன்பத்திற் குள்ளாவது தீயது. தீமையைச் செய்வதால் ஏற்படும் நன்மையைக் காட்டிலும் தீமைக்கு உள்ளாவதால ஏற்படும் துன்பம் மிகுதியானது, என்பது அனுபவபூர்வமான உண்மை. ஆகவே துன்பத்திற்கு ஆளானவர்கள், பிறருக்குத் தீமை செய்யும் வன்மையற்ற வரா யிருப்பதால், அவர்கள் ஒன்று சேர்ந்து, "நாம் ஒருவருக்கு தீமையும் செய்ய வேண்டா; தீமைக்கு ஆளாகவும் வேண்டா;" என்று செய்துகொண்ட ஒப்பந்தம் இந்த நியாயம். இந்த ஒப்பந்தமாகிய முடிவுதான் விரும்பப்படும் நன்மையாகும். உண்மையில் நியாயம் என்பது தன்னளவில் நன்மையும் பயக்க வேண்டும்; யாருக்கும் தீமையும் புரியலாகாது. இந்த நியாயமே சந்தோஷத்திற்கு வித்தாகும். மற்று, இலாப நோக்கத்தாலும், சுய நன்மை காரணமாகவும் பிறக்கும் நியாயம் உண்மையான நியாயம் அன்று. அதனை நியாயம் என்று நாம் அழைத்தற்கும் இல்லை.

"நிலைமையினாலும், சுபாவத்தினாலும் வேறுபட்ட பலரைக்கொண்ட ஓர் அரசாங்கமும் சமுகமும் இனிதே வாழவேண்டுமாயின், சட்டமும், திட்டமும் தண்டனையும் ஆயவற்றை நம்புவதில் பயன் இல்லை. அவைகளால் நல்ல தொன்றும் செய்து வைக்க முடியாது. மனிதன் நல்லவனாய் இருத்தலே வேண்டப்படுவது. நன்னயம் நாடா நல்லவர் வாழும் நாட்டில், அரசாங்கமும் குடி வாழ்க்கையும் சிறப்புறும். நன்மையின் தத்துவம் கைவருமேல், வேண்டுவென வெல்லாம் தானாக வந்து பொருந்தும்" என்று கூறிய அறிஞர் சாக்ரிடீஸ், மேலும் கூறுவரானர்.

மனிதனுடைய தேவையிலிருந்துதான் சமூக அமைப்பு எழுகின்றது. மனிதனது முதலும் முக்கியமுமான தேவை உணவுப்பொருள். இரண்டாவதுதேவை குடியிருப்புக்கான வீடு. ஆடை முதலியவை மூன்றாவதான தேவை. இந்த மூன்று இன்றியமையாத தேவைகளும், இத்தேவைகள் பூர்த்தியாவதற்காக மனிதருக்குள் ஏற்படும் கூட்டுறவும் பண்டமாற்றும், அவர்களை நெருங்கச் செய்கின்றன. எனவே சமுகம் இவ்வழி ஆரம்பமாகின்றது. மனிதனுடைய தேவைகள் பூர்த்தியாவதற்கு, நிலத்தை உழுது பயிர் செய்பவனும், வீடுகட்டுபவனும், துணி நெய்பவனும் அவசியமாகின்றனர்.

"மனிதன் ஒவ்வொருவனும் வேறுபட்ட இயற்கை உடையவன். ஒரு கருமத்தில் ஒரு மனிதனுடைய

மனம் விரைந்து நாடும். மற்றவர்களைக் காட்டிலும் அவன் அக்கருமத்தை நன்றாகச் செய்தல் இயல்வது ஆகின்றது. எனவே, மனிதனுடைய இயற்கைத் தன்மைக்கு ஏற்ற வாறு வேலைப் பிரிவுகள் ஏற்படுகின்றன. உழுது பயிர் செய்பவன், விற்பவன் வாங்குபவன், கருவிகளைச் செய்ப வன், செய்யப்பட்ட கருவிகளை உபயோகிப்பவன், கால் நடைகளை மேய்ப்பவன் என்று வேலைகள் பிரிவுபடுகின்றன. இன்னபடியான வேலைப் பிரிவினால்தான் ஒரு சமுகம் பல ரைத் தன்னிடம் சேர்த்துக் கொள்கின்றது. பின்னர் வாங்கல் விற்றல் ஆகிய வியாபார வளர்ச்சி ஏற்படுகின்றது. இறக்குமதியும ஏற்றுமதியும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அயல் நாடுகளில் இறக்குமதி செய்ய, அந் நாட்டிலுள்ள மக்களின் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற் றவான பொருள்கள் செய்யப் படுகின்றன. இதனால் வியா பாரப் பெருக்கமும், கப்பல் வசதிகளும் வேண்டப் படுகின் றன. வேலையாட்களின் தேவை உண்டாகின்றது. இத்த கைய வேறுபாடுடைய கருமங்களைச் செய்ய மனிதன் கூடு கின்ற காலை, மனிதனுடைய வேறுபாடுடைய இயறகைக்கு ஏற்றபடி, நியாயம், அநியாயம் என்னும் இவை நிலவுகின் றன. இதுதான் குடிவாழ்க்கையின் ஆரம்பத் தோற்றம்.

இவ்வழி ஆரம்பமாகும் ஜனசமுக வாழ்க்கையில், மெல்ல மெல்ல சுகம் என்னும் ஓர் எண்ணம் பிறக்கலாகின் றது. அன்னதற்கு ஆடை ஆபரணங்களும், நாற்காலி மேஜை முதலிய வசதிகளும், சுவையுடைய உணவு வகை களும், வேண்டப்படுகின்றன. பின், நடிகனும் சிற்பியும், பாடகனும் சமையற்காரனும், அம்பட்டனும், சேவகப் பெண்களும், வைத்தியனும், அவசியமாகின்றனர். இத்

தனை விதமான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வேண்டிய உணவுப் பொருள்களும், வீட்டு வசதியும், சுகத்திற்குரிய மற்றவைகளும் பெருகுவதற்கும், ஒருநாட்டார் அயல் நாட்டாருக்குச் சொந்தமான இடங்களில் படையெடுக்க வேண்டி வருகின்றது. ஆகவே அரசியல் குழப்பத்திற்கும் யுத்தத்திற்கும் முதல் ஆரம்பம் ஆடம்பரமான தேவைகளே.

இனிப்போர் செய்வதற்கு வீரர்களும் ராணுவ நிலையமும் வேண்டப்படுகின்றன. ஒரு சமுகத்தில் இருக்கும் மக்கள் அனைவரும் போர் செய்வதற்கில்லை. யுத்தக் கலையும் ஒரு நாளில் கற்றுக் கொள்ளக் கூடியது அன்று. மேலும், இத்தொழிலுக்கு யுத்தம் செய்யும் சுபாவம் உடையவர்கள் அவசியம். மோப்பத்தால் அறிந்து, விடாமல் தொடர்ந்து சண்டை செய்யும் நாய்களின் சுபாவத்தை உடைய மக்கள் சிலர் சமுகத்தில் இருப்பர். இந்த இயற்கையினர் பகைப்பதும், சண்டை யிடுவதும் கொல்வதுமாகத்தான் இருப்பர். நண்பர் என்றும் விரோதி என்றும் அந்த மனித இயற்கை அறிவதில்லை. எனவே நண்பர்களிடம் மென்மையாகவும் விரோதிகளிடம் கொடுமையாகவும் இருக்கும்படி, இந்த சுபாவம் உடையவர்களைச் செய்து, அவர்கள் அவ்வழி நடந்து கொள்ளுமாறு பார்த்துக் கொள்ள, ஒரு காப்பாளன் அவசிய மல்லவா? இந்த அவசியமான காப்பினைத் தருவதுதான் அரசாங்கம்.

---

குடி வாழ்க்கை அல்லல் இல்லா வழியில் நடப்பதற்கு அரசாங்கம் அவசியமாகின்றது. அரசாங்கத்தை நடத்து பவன், மேலே கூறப்பெற்ற இரண்டுதன்மைகளையும் உடையவனுய் இருக்க வேண்டும். எனின் யார் அந்த வேலைக்கு உரியவன்? என்பது அடுத்த கேள்வி.

நண்பர்களிடம் மென்மையாகவும் விரோதிகளிடம் கடுமையாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்னும் அக்குணங்களைக் குறிப்பித்துக் காட்டுவதற்கு, நான் முன்னே குறித்த நாயே உதாரணமாய் அமைகின்றது. நாய்கள் பழகினவர்களிடம் அன்பு காட்டும். புதிய மனிதர்களைக் கண்டால் சீறும். பழகினவர், பழகாத புது மனிதர் என்ற விதியினுல் தனது நடத்தை முறையைத் தேர்ந்து கொள்ளும் நாய் ஒரு தத்துவ சாஸ்திரி போன்றது. நாயாகட்டும் மனிதனுகட்டும், தத்துவ அறிவு யாரிடத்தில் இருக்கின்றதோ, அந்தப் பிராணி மிருதுவான தன்மை உடையதாய இருக்கும். எனவே ஜனங்களைக் காக்கும் வேலையில் அமர்பவன் தத்துவ அறிவு படைத்தவனுகவோ, அல்லது கல்வியின்பால் மிகுந்த ஆர்வம் உடையவனுகவோ இருக்க வேண்டும். கல்விப் பயிற்சிதான் மிருதுவான தன்மையைத் தரும்.

எனின், நாட்டினை ஆள்கினறவர்களுக்கு எத்தகையதான கல்வி அளிக்க வேண்டும் என்பதைக் கருதுவோம். சங்கீதம் உடல் ப்யிற்சி ஆகிய பண்டையதான பயிற்சி முறை போதுமா? சங்கீதம் என்பதில் இலக்கியக் கல்வி

அடங்கி விடும். அந்த இலக்கியம் எத்தகையதாக இருக்க வேண்டும்? இலக்கியம், உண்மையான பயன் அளிக்கும் இலக்கியம் என்றும், பயனும் நலனும் அற்ற பொய்களைக் கொண்ட இலக்கியம் என்றும் இருவகைப்படும்.

சிறு பொழுதில் குழைந்தைகளுக்குக் கற்பிக்கப் படுகின்ற, பொய்யின் மிகுதியும், சிறுமைச் செயல்களும் நிறைந்த கதைகள் தீமை விளைக்கும் தன்மையன. மேலுலகத்தில், கடவுளர்கள் இடுகின்ற பூசல்களும், தகப்பனைத் துன்புறுத்தும் மைந்தனது சரித்திரமும், தாயை வருத்தும் மகனது செயல்களும் நிறைந்த கதைகளைச் சிறுவர்களுக்குச் சொல்லி வைப்பதால், நன்மையை சிறுவர்கள் பெறுதற்கு இல்லை. இக்கதைகள், அவர்களின் நல்ல வளர்ச்சிக்கு இடையூறாய் அமையும்.

பொய்கள் நிறைந்த கட்டுக் கதைகளில் தத்துவார்த்தங்கள் இருக்கலாம். அதை நான் மறுக்க வில்லை. எனினும் சிறுவயதினரான குழந்தைகள், அக்கதைகளின் உள்ளுறைப் பொருளை அறியக் கூடாதவர்கள் ஆனபடியால், கதையின் நிகழ்ச்சிகளே அவரது மனத்தில் நிலைத்து நிற்கும். பொய்யுடைய அந்நிகழ்ச்சிகள், குழந்தைகளின் இளமனதில் பொய்மையைத் தானே வளரச் செய்யும். எனின் எத்தகைய நூல்களைப் பாடமாக வைக்க வேண்டும் என்று நான் குறிக்கலாமே யன்றி, என்னால் புத்தகம் ஆக்கித்தர முடியாது. இனி என் கருத்தைக் கூறுவேன்.

இனிச் சிறுவர்களுக்கென்று வரையப்படும் புத்தகங்களில், கடவுள் எப்படியிருக்கின்றாரோ, அப்படியே அவருக்கு இடம் தரல் வேண்டும். அக்கடவுளரும் எப்படி யிருக்

கின்றார் என்று பார்ப்போம். கடவுள், உலகத்தில் காணப்படும் நன்மை தீமைகளுக்கெல்லாம் முதல்வர், அதாவது ஆதியானவர் என்று கூறுதல் கூடாது. அவர் நன்மையின் முதல்வர். கிரேக்கிய கவிவாணர் கூறியுள்ளது போல், கடவுள் நன்மை தீமை இரண்டிற்கும் காரணம் என்றும், தனித்தனி இரண்டு குடம் நிறைய நன்மை தீமைகளைத் தன் பக்கத்தில் எப்பொழுதும் வைத்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் சொல்லி, அவரது சீர்நிறைந்த பெருமையைச் சிதைத்து விடல் ஆகாது. கடவுளர்கள் தமுக்குள் சண்டையிட்டுக் கொள்ளுமாறும் கிரேக்கர்களின் பக்கம் சேர்ந்து கொண்டு, டுரோஜன் நாட்டாரை அவர்கள் முறியடிக்க உதவுமாறும், கற்பிக்கும் கதைகள் யாவும் மிகக் கேடு விளைப்பனவாகும். இப்படி நூல் செய்வது தவறு. கடவுள் நன்மையின் நிலைக்களம். அவரது அந்தத் திவ்யமான தன்மை கெடாதபடி காத்தல் மிக அவசியம். நூல்கள் செய்வதில் முதன் முதலாகக் கவனிக்கப் பட வேண்டியது இது.

இரண்டாவதாக, உருமாறுதல், மனிதரோடு வந்து பழகுதல் ஆகிய செய்திகளைக் கடவுளுக்குத் தரலாகாது. சிறிது சிந்தித்தால், கடவுளுக்குக் கொடுக்கப் படும் உருவ மாற்றம் பொருத்தம் அற்றது என்பது புலனாகும். கதைகளில் கூறப்படும் கடவுளது உருவமாற்றம், நம்முடைய கற்பனையோ அல்லது கடவுளுடைய செய்கை தானோ என்பதை அறிதல் எளிய தொன்றே. இயற்கையும், மனிதனுடைய சிறந்த குணங்களும், வெளியிருக்கும் ஒன்றினால் மாற்றப்படும் தன்மையன அல்ல. அவைகளை ஒருவன் மாற்றி வைக்க முடியாது. தானாகவே கடவுள் தன்னை மாற்

றிக் கொள்ளலாகாதா?—என்றால், அவர் தான் இருப்பதை விடச் சிறப்பாகத் தன்னை மாற்றிக் கொள்ள முடியாது. அவர் தன்னை மாற்றிக் கொள்வதெனில், அதனில் அவர் தன்னை இழித்துக் கொள்ளவே முடியும். அவர் எல்லையில் அழகுடனும் ஈடற்ற சிறப்புடனும் இருக்கின்றார். அதற்கு மேற்பட்ட அழகோ சிறப்போ இருத்தற்கு இல்லை. எனவே இருக்கின்றபடி அவர் இருந்தால் போதுமே.

கடவுள் உருவத்தை மாற்றிக் கொண்டு இரவில் வருவதும், பிச்சையெடுப்பதும் ஆகிய கதைகள் இருத்தல் கூடவே கூடாது. கடவுள் என்பது ஒரு முழுமையான உண்மை. அவர் மாறுவதில்லை, பொய் வேடம் புனைந்து அவர் எவரையும் வஞ்சிக்க மாட்டார். கடவுள் சத்தியத்தின் ஸ்வரூபம் ஆனதால், பொய்கூத்தும் புனைவேடமும், அவரது மாசிலாத சத்தியத் தன்மையைக் குலைத்து விடும்.

ஜனசமுகம் நல்வாழ்வு வாழ வேண்டுமாயின், அவர்களுக்கு மதத்தினிடமும், கடவுளினிடமும் குறையாத பற்று வேண்டும். அந்தப் பற்றும் பயத்தின் காரணமாக எழுந்ததாக இருத்தல் கூடாது. பயத்தினால் ஏற்படும் மதப் பற்று விரும்புதற்கு உரியதன்று. பயம் என்பது மக்களின் மனத்தை விட்ட கன்று, அதன் பயனாய் மதம் பரிசுத்தம் அடைய தேண்டும்.

சாவுக்கு அஞ்சுபவன் தைரியசாலியாக இருக்க முடியுமா? பிறப்பினது மறுகோடி சாவு, நரகத்தைக் காட்டிப் பயமுறுத்தும் கதைகள் எல்லாம் பொய் இந்த உண்மை கைவர வேண்டும். சத்தியம் வாழ்க்கைக் கருத்தில் முதலிடம் பெற வேண்டும். பொய்யும், வஞ்சனையும், சிறுயானு

டர்க்கு, ஒரு வேளை மருந்தைப்போல் உபயோகமாகலாம். எல்லாம் வல்ல கடவுளுக்குப் பொய்யின் உதவி அவசியம் இல்லையே. எனவே, சிறுவர் சத்திய நினைவினில் வளரும் படி உதவவல்ல வழியில கல்வி அமைய வேண்டும். சிறுவர் களுக்குத் தன்னடக்கமும், கீழ்ப்படிதலும் போதிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவர்களிடம் மிருதுவான தன்மையும், மிதமும், நிதானமும் உண்டாகும். இந்த நீர்மையுடைய பூமியில்தான் கோபதாபங்கள் இல்லாதன வாகும். அன்பும் அமைதியும் முளைவிடும். இவைகளோடு சங்கீதம், சிற்பம் ஆகிய நுண்கலைப் பழக்கமும், ஓரளவு உடல் பயிற்ச்சியும் அளிக்கப்படல் வேண்டும். ஜன சமூக வாழ்க்கை நல்ல முறையில் செழிப்பதற்கு இவ்வழி சிறு வர்களைப் பயிற்றுவித்தல் மிக மிக அவசியம்.

---

இனி, நாட்டை ஆள்வதற்கு உரியவர் யாவர் என்று பார்ப்போம்? வயது முதிர்ந்தவர்களே ஆள்வதற்கு உரியவர். பெரியவர்களே அனுபவ முதிர்ச்சி யில்லாத சிறுவர்களை ஆளவேண்டும். வயதினால் முதிர்ந்த நல்லாரே, நமது சிறந்த காப்பாளர்கள் ஆவார்கள். தன் கீழுள்ள மக்களை நேசிப்பவர்களும், தன்னைப்போல் மன்னுயிரைக் கருதுபவர்களும் நன்மையில் சிறந்த பெரியோர்களே ஆவர். எனவே, மேன்மைக் குணமுடைய பெரியோரை நாம் தேடிக்கொள்ள வேண்டும்.

ஆளுகைக்காக நம்மால் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள், தாங்கள் இருக்க வேண்டிய நெறியில் இருந்து வருகின்றார்களா என்றும் நாம் கவனித்து வரவேண்டும். ஏனெனில், காலம் செல்லச் செல்ல, அவர்கள் மனம் மாறுதல் அடையலாம். சுகாதி வைபவங்கள் அவர் மனத்தைக் கவர்ந்து, வகிக்கும் ஸ்தானத்திற்கு உரியதான நெறியிலிருந்து பிறழச் செய்யலாம். துன்பங்களால் மனிதனது நிலையில் மாறுதல் ஏற்படலாம். எனவே காக்கும் தொழிலை மேற்கொண்ட நமது காப்பாளர்கள், நெருப்பின் சோதனைக் குள்ளான தங்கத்தைப் போன்றவர்களாயும் இருத்தல் வேண்டும். வாழ்க்கையில் இன்றியமையாதனவான சோதனைகளுக்குத் தளராமல் இருந்து, நடுவு நிலை சோராத வெற்றி வீரர்களே ஆளும் தொழிலைச் செய்யத் தகுந்தவர் ஆவர். அப்பொழுதுதான், நாட்டின் நலமின்றி வேறொன்றிலும் பற்று இல்லாதவர்களாய் அவர்கள் இருக்க இயலும். அத்தகைய மேன்மையோர்

உயிரோடு இருக்குங்காலத்திலும் இறந்த பின்னரும் நமது மரியாதைக்கு உரியராவர். அத்தகையாரைக் கொண்ட வகுப்பு, நம்மால் போற்றப படுவதற்குரிய வகுப்பு. அவ் வகுப்பினைச் சேர்ந்தவரே நமது காப்பாளர். மற்ற வகுப்பினைச் சேர்ந்தவர்கள், அக்காப்பாளருக்குத் துணைக் கருவியே ஆவர்.

மக்கள் எல்லோரும், இப்பூமியின் குழந்தைகள். பிள்ளைகளின் கடமை பெற்ற அன்னையைப் போற்றிக் காத்தல் ஆகும். அப்பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் சகோதரர் ஆகின்றனர். சகோதரர்களே ஆயினும், அவர்கள் எல்லோரும் ஒரே விதமான இயற்கையை உடையவர்களாய் இருக்க வேண்டும் என்பதில்லை. தங்கத்தின் தன்மை யுள்ளவர்களாய்க் கடவுள் சிலரைப் படைத்துள்ளான். அத்தங்கத் தன்மை யுள்ளவர்களே நாடாளுதலுக்கு உரியவர். வெள்ளியின் தன்மையுடைய வேறு சிலர், ஆள்கின்றவர்களுக்குத் துணையாய் அமைய வேண்டியவர்கள். இவ்விரு தன்மையர் போக, மற்றவர்கள் பித்தளை இயற்கையும் இரும்பு, இயற்கையும் உடையவர்கள் ஆகின்றனர். உழுது பயிரிடுதலும், மற்றக் கைத்தொழில் களையும் வியாபாரத்தையும் செய்தலும் அவர்களது வேலையாகும். இதை மக்கள் மறத்தலாகாது.

ஆனால் ஒன்று. தங்கத் தன்மை யுடையவனுக்குத் தங்கத் தன்மையுடைய குழந்தைதான் பிறக்க வேண்டுமென்பதில்லை. வெள்ளித் தன்மையுடைய குழந்தைகளும் பிறக்கலாம் வெள்ளிததன்மை யுடையவருக்குத் தங்கத் தன்மையுடையகுழந்தைகளும் பிறக்கலாம். இவ்விதம் இயற்கை மாறுபாடு ஏற்படுவது இயல்பே. உழுது பயிரிடுபவனுக்குத்

தங்க இயற்கையுடைய குழந்தையும் பிறக்கலாம். அப்பொழுது அந்தப்பிள்ளை மேலேபோக வேண்டியதுதான். தங்கத் தன்மையுடையார்க்குப் பிறந்த இரும்பு இயற்கையுள்ள பிள்ளை கீழேபோக வேண்டியதுதான். இல்லையேல் அரசாங்கமும் குடிவாழ்க்கையும் கேடு அடையும். நான் சொல்லும் இந்த உண்மையை மக்கள் ஏற்பார்களா? இக்காலத்தவர் ஏற்காமற் போனாலும், வருங்கால சந்ததியார் ஏற்றே தீர வேண்டும்.''

இந்த சந்தர்ப்பத்தில், "நம் நாட்டு மக்கள் சுகாதி வைபவங்களைத் துறந்து ஒரு வேலையாளைப்போல் இருக்க வேண்டுமா? சொத்து முதலிய சுதந்திரங்கள் அவர்களுக்கு இருக்கலாகாதா? அவர்கள் சந்தோஷ மற்றவர்களாக இருக்க வேண்டுமா?'' என்று சிலர் கேட்க, சாக்ரிடீஸ் பதில் கூறுவார்.

"அவர்களைச் சந்தோஷம் உடையவர்களாகவோ, அல்லது சந்தோஷம் அற்றவர்களாகவோ செய்வது நமது நோக்கம் அன்று. நாடு என்கின்ற முழுமையின் நன்மையே நமது நோக்கம். முழுமையின் ஒரு பகுதி எப்படியிருக்கின்றது என்று கருதுவது கடன் அன்று. ஒரு சிறந்த சிற்பியினிடம் சென்று, "ஐயா, சிற்பியே, உருவத்தின் சிறந்த உருப்பான கண்ணை ஏன் கருப்பு நிறம் உள்ளதாகச் செய்தாய்? கண்ணுக்குச் சிவப்பு நிறம் தந்திருக்கலாகாதா '' என்று கேட்டால் "கண் கண்ணாக இருப்பதுதான் தகுதி. நீ முழு உருவத்தையும் நோக்க வேண்டும். கண் வேறு நிறமாயிருந்தால் உருவத்தின் முழுமை கெட்டுவிடும்.'' என்று அல்லவா அவன் பதில்மொழிவான்.

முட்டாளின் சுவர்க்கம் என்று சொல்வதுண்டு. அதனை நான் மனத்தால் உருவகப் படுத்திக் கொள்ள முடியும். ஒவ்வொருவரும் குடித்து மகிழ்ந்தும், உடுத்து மகிழ்ந்தும் வாழலாம். குயவன் ஒருவன் நாற்காலியில் படுத்துக்கொண்டு களிக்கலாம். தோல்வினைஞன் ஒருவன் தன் வேலைக்கு ஓய்வு கொடுத்துவிட்டுக் களியாட்டு அயரலாம். இப்படியே மக்கள் தங்கள் தங்கள் தன்மைக்குரிய வேலைகளை விட்டு விட்டுக் களியில் மகிழலாம். இப்படி மக்கள் தங்கள் சந்தோஷம், தங்கள் உரிமை என்று சொல்லி வியவகரிப்பார்களாயின் சமுக முழுமையின் நலம் கெடும். ஒரு ஜன சமுகம் சக்கிலியத் தன்மையினன் இல்லாமலும் நடைபெறலாம். ஆனால் ஆள்பவர் தன்மையிழந்து போவார்களேயாயின், நாடு குழப்பத்திற்கு உள்ளாகாது தீராது.

தனிமனிதன் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். அதனால் கெடுதி ஒன்றும் இல்லை. ஆனால் எல்லாத் தன்மையரின் நன்மைக்குரிய கருமங்களால் கட்டப் பெற்ற சமுக வாழ்க்கை செழித்து வளராது. சமுக வாழ்க்கையின் அங்கங்களான ஒவ்வொரு வகுப்பாரும் அவரவர்களது கருமங்களை ஒழுங்காகச் செய்தே தீரவேண்டும். சந்தோஷம் என்பது, ஒரு மனிதரை அல்லது வகுப்பினரைப் பற்றியது அன்று. ஒரு சமுகத்தின் சந்தோஷந்தான் அச்சமுகத்தின் அஸ்திவாரமான எல்லாருடைய சந்தோஷமும் ஆகும்.

மத்திய வகுப்பினரை எடுத்துக் கொள்வோம். கருமானாய் இருப்பவனுக்கு அவனது வேலைக்குரிய கருவிகளை வாங்குவதற்கு வேண்டிய பணந்தான் தேவை. முதல்

வைத்து வியாபாரம் செய்ய அவனுக்குப் பணம் இருத்தல் கூடாது. ஒவ்வொரு வகுப்பினருக்கும் அவரவரது தேவைக் குரிய பணந்தான் இருக்க வேண்டும். தேவைக்குக் குறை வாகவும், அதிகமாகவும் பணம் இருத்தல் கூடாது. ஜனங் கள் ஏழையா யிருந்தால், அற்பகுணம் படைத்தவர்கள் ஆவார்கள். செல்வ மிகுதி யிருந்தால் சோம்பேறிகளாய் விடுவார்கள். எனவே இருவழியிலும் திருப்தி என்பது அவர்களுக்கு இராது. திருப்தி யில்லாத மக்களைக் கொண்ட ஒரு ஜன சமுகம் எப்படி அயல்நாட்டுப் பகை யைக் கடக்க இயலும்?

ஒரு சமுகத்தின் அங்கங்களான பல்வேறு தோழி லினர் தந்தம் தொழிலினை முறையே செய்து வந்தால் தான், அச்சமுகம் வலியுடனும் முழுமை குன்றுமலும் நிரந்தர நன்மையை நல்கி நிற்கும் என்று கூறினேன். அங் கங்களானோர் சமுக நலமே கருத்தாகத் தங்கள் தங்கள் கரு மத்தில் பொருந்தி யிருப்பதற்கு முதலும் முக்கியமுமான காரணம் கல்வி. செம்மையதான கல்வியால் ஜன சமுக இயந்திரம் இயக்கப்படுமாயின், அந்த இயந்திரம் நேரிய பாதையில் நடப்பதாகும். தலை முறைக்குத் தலை முறை மக் களின் ஒழுக்கம் உயரும். எனவே, கல்வி விஷயமும், அது அளிக்கப்படும் முறையும், நாடு காப்பவரால் நன்கு கவனிக்கப்பட வேண்டும். கல்வி முறையில் அடிக்கடி எந்த விதமான மாறுதலும் செய்யப்படல் ஆகாது.

உடல் பயிற்சியும் சங்கீதமும பண்டைமுறையிலேயே போதிக்கப்பட வேண்டும். அடிக்கடி கல்வி முறையில் மாறுதல்களைச் செய்தல் ஒரு சமுகத்தின் நல் வாழ்க்கை யைக் குலைத்து விடும். ஒரு நாட்டினது சங்கீதக் கலையில் மாறுதல்கள் செய்வீர்களேல் சிறிய கால அளவில், அந் நாட்டின் ஆட்சி முறையிலும்,சட்ட திட்டங்களிலும் மாறு தல்கள் செய்ய வேண்டி நேரிடும். '' என்று டாமன் என்னும் வித்தகப் பெரியார் கூறிய வாசகம் கூர்ந்து கவனிக்க வேண் டியது ஒன்றாகும். ஒரு மாறுதலைப் பல மாறுதல்கள் தொடரலாகும்.

பண்டைய முறைகளிலிருந்து நாம் செய்யப்புகும் மாறுதல்கள், ஆரம்பத்தில் குற்ற மற்றனவாகவும், நன்மை

பயப்பனபோலும் தோன்றலாம். ஆனால் போகப் போக அம்மாறுதல்கள் தீமையின் விளைவிலேதான் போய்முடியும். இம்முறை மாறுதல்கள், மனிதரின் மனத்தில் அவர்களும் அறியாவண்ணம் மாறுதலைச் செய்து விடுகின்றன. சிறிது சிறிதாக, மனிதர்களின் எண்ணம் குணம் நடத்தை எல்லாம் மாறி விடுகின்றன.

மனிதர்களினிடம் ஏற்படும் புதிய மாறுதல்களினால்' சமூக முறையும், வியாபார முறையும், தொழில் முறைகளும் நெறி மாறி நடக்கவே, அதன் பயனாய் நாட்டின் நிரந்தரமான நலம் கெடுகின்றது. பின்னர் எஞ்சுவது குழப்பந்தான். எனவே, இருக்கின்ற முறைகளில் மாறுதல்களைச் செய்வது அறிவுடைமை யாகாது. ஆகவே, கல்வி முறையில் எந்த விதமான மாறுதலையும் செய்யாமல், நம்மைக்காக்கும் தொழிலை மேற்கொண்டவர் கல்வியைப் பரப்பி வருவார்களேயானால், சமுகத்தில் நல்லொழுக்கம் மேன்மேலும் வளர்ந்து வரும். ஜனசமுகத்தின் நல்வாழ்க்கைக்கு வித்தான நல் ஒழுக்கம் பெருகி வருமேல், பின் சட்டங்களுக்கும் திட்டங்களுக்கும் அவசியமே இல்லை.

இனம் இனத்தையே வளர்க்கும். நன்மை நன்மையையும், தீமை தீமையையும்தான் வளர்க்கும். எனவே, கல்வி முறையில் மாறுதல்கள் செய்யாமலும், மாந்தரிடம் காணப்படும் குறைகள் அகலும் வழியும், ஒரு நாடு காக்கப் படுமாயின் போதும். மாந்தர் ஒழுக்கத்தால் உயர்வர். மக்கள் உயர்வார்களாயின் ஆட்சி முறையும் தானே உயரும். அதாவது ஆளுதல் என்ற காரியம் அவசியம் இல்லாததாகும். புதுமை யொன்றும் புகுத்தாமல், செவ்விய கல்வி

மக்களுக்குக் கொடுக்கப்படுமாயின், அக்கல்வி, ஆட்சியில் உள்ள குறைகளை அகற்றிப், பொது நலத்திற்கு இயன்ற குடிவாழ்க்கையை எய்துவிக்கும்.

நாட்டின் நலத்திற்கான சட்ட திட்டங்கள் எவை எவை என்று நான் இங்கு வகுக்கப் போவதில்லை நல்லொழுக்கம் இல்லாக்கால், சட்டத்தால் ஒன்றும் சாதித்து விட முடியாது. சட்டத்தால் செப்பனிட முயல்வதெல்லாம் பேதைமை ஆகும். மனிதன் வகுக்கும் சட்டங்கள் எல்லாம் மனிதனைச் செப்பனிடப் போதுமானவை யாகா. சட்டங்கள்தான் ஒன்றன்பின் ஒன்றாய் எல்லையில்லாமல் வளரும். சட்டம் தன் இனமான சட்டங்களை வளர்ப்பதை யல்லால் வேறு என்ன செய்ய முடியும்?

ஆகவே, ஒரு நாட்டைக் காப்பவர், அந்நாட்டின் கல்வி முறையைக் காக்கட்டும். கல்வி மற்றெல்லாக் காவலையும் செய்து கொள்ளும். நல்ல கல்வியின் துணையில்லாமல் ஒரு நாட்டைச் சில சட்டங்களாலும், சிலதிட்டங்களாலும் செப்பனிட முயல்வது, ஒரு நோயாளி தன் நோயைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுத் தனக்கு விருப்ப முள்ளதின் பண்டங்களைத் தின்று, அந்நோயை விலக்க முயல்வதை ஒக்கும்.

இது வரையில், மக்களின் ஒழுக்கமே சமுகத்தின் சந்தோஷம் என்றும், தனி மனிதனது சந்தோஷம் என்பது இல்லை என்றும் கூறினேன். சமுகத்தின் சந்தோஷமே அந்த சமுகத்தின் அங்கங்களான ஒவ்வொரு மனிதனுடைய சந்தோஷம். பின், மனிதனுக்கு சந்தோஷம் என்பது இல்லையா?—என்று கேட்கலாம். மனித தர்மத்தில் முதவிடம் பெற வேண்டுவது கடமை. கடமையை ஒருவர் செய்

வதால் நிகழ்வது சந்தோஷம். மனித முயற்சியின் மிகச் சிறந்த நோக்கம் மனிதவர்க்கத்தின் நன்மையை நாடுவது ஆகும். உலக நிர்வாகத்தில் தெய்விகத் தன்மை ஏற்படுமாயின், அதுதான் உலகத்தில் வசிக்கின்ற ஜீவராசிகளின் சிறந்த சந்தோஷம்.

தெய்விக நலம் வாய்ந்த நிர்வாக அமைப்பில், தனி மனிதனுக்கும் அவனதான ஒரு சந்தோஷத்திற்கு இடமுண்டு. அவனவன் தனது கடமையைச் செய்து விட்டு, ஒழுக்கத்துடன் வாழ்வதே அவனவன் எய்தும் சந்தோஷம். மேலும் சந்தோஷம் என்னும் பதம் பல பொருள்களை உடையதா யிருக்கின்றது. ஒழுக்கமுடைய வாழ்க்கையின் பயனை சந்தோஷம் குறிக்கும். இந்திரிய சுகத்தையும் இப்பதம் குறிக்கலாம். இது மனித உள்ளத்தின் நிகழ்ச்சியா? அல்லது புறமிருந்து வரும் செய்தியா? என்ற கேள்வியும் பிறக்கலாம். எனவே, சந்தோஷம் என்னும் இப்பதம் வஞ்சனை உடையது, தீர்மானமான ஒரு பொருளை இப்பதம் உடையதன்று. (இப்பதம் குறிக்கும் பொருள் இதுதான் என்று முடிவாகக் கூறுவதற்கு இல்லை என்பது இந்த வாக்கியத்தின் கருத்து.)

ஆகவே, தீர்மானமான பொருளையும், நியாயம் சத்தியம் என்னும் பதங்கள் பெற்றுள தெய்வத் தன்மையையும் சந்தோஷம் என்னும் இப்பதம் பெறவில்லை. இது உயரிய இயற்கையை உடையது ஆகாது. வெளிவாழ்க்கைக் குரிய வசதிப் பொருள்களுடன் சந்தோஷம் என்னும் இச்சொல் தொடர்பு கொள்கின்றதே ஒழிய, ஆன்மானுபவ நன்மையொடு உறவு கொண்டிருக்க வில்லை. ஆதலால் சந்தோஷம் என்பது சிறந்த மனித வாழ்க்கைக்கு அஸ்திவாரம்

ஆகாது. நியாயமும் சத்தியமுமே மனித வாழ்க்கையின் நோக்கம் ஆகவேண்டும்.

ஒரு நல்ல சமுகமாகட்டும், ஒருநல்ல அரசியலாகட்டும் அவற்றின் நோக்கம் இச்சத்தியத்தையும் நியாயத்தையும் பற்றியதாய் இருக்க வேண்டும். செய்கின்ற ஒரு காரியம் அதிகமான ஜனங்களுக்கு சந்தோஷம் தரக்கூடியதாயின், அக்காரியம் சத்தியத்திற்கும் நியாயத்திற்கும் விரோதமான தாய் இருந்தாலும், அது செய்யப்படலாம் என்று அரசியல் வாதிகள் சாதிப்பர். அதை, சந்தர்ப்ப அவசியம் (Expediency)என்றுபெயரிட்டு அழைப்பர் அக்கூட்டத்தார். ஒரு ஜனத்தொகையின் நன்மை என்ற கொள்கையினால், அந்த சந்தர்ப்ப அவசியம் கட்டப்படுவதால், அது சாச்வத தத்துவமுடையநியாயமும் சத்தியமும் ஆதற்கு இல்லை. சத்தியமும் நியாயமும் எவ்விதத்தளைகளாலும் கட்டுப் படாமல், எந்நிலையிலும் தாமேயாய் நின்று, எல்லோர்க்கும் எவ்விடத்தும் நிரந்தர நன்மை பயப்பவை ஆகும். அரசாங்கமாகட்டும், சமுக மாகட்டும், தனி மனிதனாகட்டும் அவைகளேத்தான் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் அவைகளை அஸ்திவாரமாகக் கொண்ட வாழ்வுதான் சீரிய வாழ்வாகும். சந்தர்ப்ப அவசியம் என்பது தீயவர்க்குக் கைத்துணையாகும் கருவி.

மாந்தர் தனித்தனி எந்நிலையினில் இருக்கின்றனரோ, அந்நிலையிற்றான் சமுகமும் அரசியலும் இருக்கும். நல்லவர்களைக் கொண்ட ஒருநாடும் அரசியலும் நல் நிலையிலே தான் இருக்கும். சமுகத்தையும் அரசாங்கத்தையும் ஆக்குபவர் தனி மனிதர்கள் அல்லவா? ஸிதியன் நாட்டாரும், திரேஸ் நாட்டாரும் ஆத்திரக்காரர். அந்நாட்டின் சரிதை

யில் ஆத்திரத்தின் ஓட்டத்தையே காண்கின்றோம். அதீனி யர்களாகிய நாம் புத்தியின் வளர்ச்சியுடையவர்கள்; நமது நாட்டில் அறிவின் நடமாட்டத்தை நாம் காணவில்லையா? எகிப்து நாட்டாரும், பொனீஷியரும் பேராசை பிடித்த வர்கள். அவர்களது பேராசை அந் நாட்டு அரசியல் முறையில் காணக் கிடக்கின்றது. எனவே, ஒரு நாட்டின் தன்மை மக்களின் தன்மையை ஒத்ததாகும். ஒரு நாடும் அரசியலும் சிறப்புறுவதற்கு, நாம் சட்ட திட்ட முயற்சி களை விட்டுவிட்டு, மக்களின் வாழ்க்கை நல்லொழுக்கத்தில் நிலைபெறுமாறு செய்வதற்கு முயல வேண்டும். அதுவே அறிவுடைமை யாகும். அதுவே அரசாங்கத்தை நடத்து வோரின் கடமை. மற்ற விஷயங்களைக் கடவுளின் கைக ளில் நாம் விட்டு விடலாம்.

தத்துவ அறிவு படைத்த ஒருசிலரே, ஒருநாட்டினை ஆள்வதற்கு ஏற்றவர் என்பது எனது முடிவான துணிபு. ஜனநாயகம் (Democracy) என்று அழைக்கப்படும் எண் ணிக்கையினரது அரசாங்கம் நாட்டிற்கு நன்மையை ஒரு நாளும் அளிக்காது அத்தொகையினர் இருக்கையின் மேய்ம்மையை (True Being) அறிய மாட்டா எளியர். நியாயம், அழகு, சத்தியம் என்பவைகளைப் பற்றி அவர் மனத்தில் திடமான எண்ணம் எதுவும் இல்லை. தத்துவ அறிவு கைவந்த வித்தகப் பெரியோரே விஷயத்தின் வாய் மையையும், அன்னதின் இடத்தையும் தக்கபடி அறியும் ஆற்றல்உடையவர். ஆளும் காரியத்தை மெய்ம்மை வழுவாத வழி அவர்களால்தான் செய்ய முடியும். ஏனெனில், என்றும் சாச்வதத்திலும் சத்தியத்திலும் படிந்தழுந்த உள்ளத்தை உடையவர் அவர். அசத்தியம் அவர்களை நெருங்க அஞ்

சும். அற்பத்தன்மையவான உள்ள எழுச்சிகளும் ஆசைகளும், அறிவின் தெளிவுடைய அவர்களிடம் உண்டாவதற்கு இல்லை. காலத்தால் மனித நல்வாழ்க்கை சிதைவுறலாம். அவ்வாறு சிதைவுண்ட வாழ்க்கையின் கோலம் பயிலும் நாடகத்தில், அப்பெரியோர் தாமும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்று பார்க்கும் பண்புடையவர். மனிதனது சிறு வாழ்க்கையை அவர்கள் ஒரு பொருளாக மதியார். சாவும் அவர்களுக்கு அச்சந்தராது. எனவே, அவர் நடுநிலை பெயராமல், எதற்கும் அஞ்சி அசையாமல் வாழ்க்கையின் அலங்கோல நாடகத்தில் படாமல், தாமும் தமது சிந்தனையுமாக இருப்பர். எல்லோரிடத்திலும் நெருங்கிய நட்பு உடையவர் அவர்; இனிய சுவபாவமுடையவர்; கோழைத்தனமும், செருக்கும் அவரைச் சேரா. அவர்கள் எதையும் அறிந்து தெளிய வல்லார். தெளிந்ததை அயராமல் காத்துக் கொள்ளும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு. அவர் மனம் நிரந்தரமான அமைதியில் நிலை கொண்டிருக்கும். சத்தியம் அவர்களது இயற்கை. இத்தகைய நற்குணங்கள் நிறைந்த அவர் பொறாமை என்பதை அறியார். எனவே, குற்றம் அற்றவர் அவர். எனவே, அத்தகைய மேன்மையோர் அல்லாமல் வேறு யாவர்தான் நம்மை ஆளுதற்கு உரியவராவர்?

# 7

இன்னபடி சாக்ரிடிஸ் கூறிவருகையில், ஒரு நண்பர் இடைமறித்து, "ஐய, தத்துவம் பேசுவதைத் தம் வயிறு வளர்ப்பதற்குறிய சாதனமாய்க் கொண்டிருக்கின்றனர் எத்தனையோ பலர். அத்தகைய சாமர்த்திய சாலிகள் அயோக்கியர்களாய் மாறக் காண்கின்றோம். அவர்கள் நல்ல இயற்கை சிறிது உடையவர்களாயின், முடிவில் முட்டாள்கள் ஆகின்றனர். கெட்ட சுவபாவம் உடையவர்களாயின் துஷ்டர்களாய் விடுகின்றனர். இதற்கு என்ன சொல்லப் போகின்றீர்கள்? தத்துவ வளம் உடையவர்களும் இவ்வாறு இழிந்து விட நேர்கின்றதே. எனின், அவர்கள் எப்படி ஆளத்தகுந்தவர் ஆவார்கள்?" என்று கேட்கவே, சாக்ரிடிஸ் எதிர் கூறுவார்.

"ஐய, நல்ல கேள்வியே. சிறிது விளக்க முயல்வேன். அரசாங்கத்திற்கும் நல்ல மனிதர்களுக்கும் உள்ள சம்பந்தம் நூதனமானது. அந்த சம்பந்தத்தை விளக்க, நான் ஒரு கட்டுக்கதையின் துணையை நாட வேண்டியவனாய் இருக்கிறேன். ஒரு கப்பலின் தலைவனை எடுத்துக் கொள்வோம். அந்தக் கப்பலில் இருக்கும் மற்ற வேலையாளர்களைவிட அவன் சிறிது உயரமானவன், அவனுக்குக் காது சிறிது மந்தம். கண்பார்வையும் குறைந்தவன். கப்பல் ஓட்டும் தொழிலை அவன் நன்றாக அறிந்தவனாயினும், கப்பலில் வேலை செய்யும் ஆட்களின் தன்மையையும், அவர்களை ஏவல் கொள்ளும் முறையையும் தெரியாதவன் கப்பலில் வேலை செய்வோர், கப்பலின் கதியைத் திருப்ப வேண்டும் என்று விரும்பினர். அவர்கள் விரும்பியபடி கப்பலைத்

திருப்புவதற்கு இல்லை. இது வேலை யாட்களுக்குக் கோபத்தை உண்டாக்கியது. கப்பலைச் செலுத்தும் அதிகாரத்தைத் தாம் கைப்பற்றிக் கொள்ள எண்ணிக் கப்பலோட்டியின் உணவில் மருந்தைக் கலந்தனர். மருந்தின் பயனுய்ச் செயலற்றுப் போன கப்பலோட்டியைக் கட்டிப் போட்டு விட்டுக் கப்பலைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். இப்படிச்செய்த வேலையாளருக்குக் கப்பல் ஓட்டும் தொழில் தெரியாது. அக்கலையைக் கற்றுக் கொள்வதும் சுலபம் அன்று. அப்படி யிருந்தும் இந்தக் குழப்பத்தில் சேருபவர்கள் நல்லகப்பலோட்டி என்று கொள்ளப்படுகின்றார்கள். காற்று ஓடும் திசையையும் நக்ஷத்திர கதியையும் அறிந்து கப்பலைத்திருப்ப வேண்டும் என்பதையும், வேலைக்காரர்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும், அந்தக் கலையை அறிந்தவனே கப்பல் தலைவனுயிருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் அறியவில்லை. மேலும் அவனை முட்டாள் என்றும், வானை நோக்குபவன் என்றும் பரிகாஸமும் செய்கின்றனர்.''

இதுதான் என்கதை. இது என் கருத்தை விளக்கி வைக்கும். எனவே தத்துவ அறிவு படைத்தவனைப் பழிப்பதில் பயன் இல்லை. அவனைச் சரியே உபயோகப் படுத்திக் கொள்ளாத மனிதர்களே பழிக்கப்பட வேண்டியவர்கள். வித்தகம் உடையவன் செல்வனை நாடமாட்டான். ஏழையோ பணக்காரனே யாராகட்டும் தேவையிருக்கும் பொழுது வயித்தியனை அவர்களே தேடிச் செல்ல வேண்டும் அல்லவா? எனது கதையில் கூறிய கப்பல் தலைவன் நல்ல கப்பலோட்டியே. வானம் நோக்குபவன் என்று குழப்பக் காரர்களால் இகழப் பட்ட அவன் தத்துவ சாஸ்திரியே

அவனை சரியே உபயோகப் படுத்திக் கொள்ளத் தெரியாத கப்பல் வேலையாளர் அரசியல் வாதிகளான ஜனங்கள். அந்த அரசியல் வாதப் புல்லர்களின் அறியாமையினால் கப்பல் தலைவன் உபயோகம் இல்லாதவன் ஆனது, அவனது குற்றமா? அதேபோல் தத்துவ அறிஞனைப் பழிப்பதில் பயன் இல்லை. தத்து அறிவில்லா மாக்களே தத்துவ அறிவுடையவர்களைக் கெடுத்து விடுகின்றனர்.

ஜனநாயகம் அல்லது எண்ணிக்கை யாட்சி நாட்டின் நலத்திற் குரியதன்று என்று கூறினேன். நியாயம், அழகு சத்தியம் என்பன பற்றி பாமர ஜனங்களுக்கு எவ்வித முடிவான அபிப்பிராயமும் இருப்பதில்லை. தத்துவ அறிவு படைத்த மேலோரே இவைகளைப் பற்றிய தீர்மானமான அபிப்பிராயம் உடையவர்களாக வல்லவர். விஷயங்களைப் பற்றிய சாச்வத வாய்மையின் அறிவினை உடையவர்கள் அவர்களே ஆவர். சத்யமே அவர்களது அணிகலன். அறிவின் ஆர்வத்தில், அவர்களது சிறு ஆசைகள் எல்லாம் மறைந்து விடுகின்றன. காலமும் வாழ்க்கையும் அவர்களுக்குக் கண் காட்சி ஆகின்றனவே யல்லாமல், அவைகளால் அவர்கள் பற்றப் படுவதில்லை. சிந்தனையின் பெருமிதத்தில் வாழ்கின்ற அவர்களுக்கு மானுடச் சிறு வாழ்க்கை ஒரு பொருள் அன்று.

சாவினை அஞ்சார். எல்லோர்க்கும் அண்மையினரா யிருக்கும் சுவபாவம் உடையவர். எந்நிலையிலும் தளராத மனத்திட்பம் உடையவர் அவர். ஒன்றை எளிதில் கற்பதும் கற்றதைக் காத்து வைப்பதும் அம்மேலவர் தன்மை சத்தியம் அவர்களது இயற்கை யாகின்றது. இத்தகைய நற்குணங்களின் வைப்பாகும் நல்லோரை அறிவில்லா மக்களே கெடுக்கின்றனர் என்பதை மறத்தலாகாது. அவர்கள் அறிவிலா மக்களால் கெடுக்கப் படுவதற்குக் காரணம் என்ன வென்று ஆராய்ந்து பார்ப்போம்.

கெடுதல்களுக்குக் காரணமாய் அமையாத நல்ல வஸ்து என்பது ஒன்று இல்லை. உடல்நலம், வலிமை, செல்வம்,

செல்வாக்கு அந்தஸ்து ஆயவெல்லாம் தகுதிபகன்ற நிலையில் (Unfavourable Circumstances) தீமைக்குறியவைகள் ஆகலாம். தாவர உலகத்தை எடுத்துக் கொள்வோம். விதைகள் நல்லனவாய் இருக்கலாம். இருந்தாலும் நல்ல விதைகள் பயிராவதற்கும் நல்ல சத்துள்ள பூமியும் நல்ல காற்றும் வேண்டியிருக்கின்றன. வளம் இல்லாத பூமியில் நல்ல விதைகளும் கெட்டு விடுகின்றன. மட்டமான விதைகள் கெட்ட நிலத்தில் கெடாமல் இருக்கக் காண்கிறோம். எனினும் பெரியதொரு பயனுக்கு அவைகள் உரியவை ஆகா. இது தத்துவ, அறிவுடையவர்களுக்கும் பொருந்தும். தத்துவ அறிவு படைத்தவன் மனித இனத்தில் மிகவுயர்ந்தவனாக வாவது இருக்க வேண்டும். அல்லது மிக இழிந்தவனாகவாவது கெட்டு இழிய வேண்டும். ஆகவே, அவன் இருக்கும் இடத்தின் தன்மையும், காலப்போக்கும் அவனது உயர்வு தாழ்வுக்குக் காரணம் ஆகின்றன.

ஸோபிஸ்டு என்று அழைக்கப்படும் விதண்டாவாத சாமர்த்தியசாலிகள், நம் நாட்டு இளைஞர்களைக் கெடுத்து வருகின்றனர் என்று எல்லோரும் சொல்லக்கேட்கின்றேன். அவர்களை நாம் ஏன் வீணே கடியவேண்டும்? அவர்கள் யாரையும் கெடுக்க வில்லை. போதுஜன அபிப்பிராயம் என்னும் ஒரு பாதகமே, நம் நாட்டில் நம்மைக்கெடுத்து நாசம் செய்கின்றது. எங்கெங்கும், இப்பொதுஜன அபிப்பிராயம் என்னும் பேயின் நடமாட்டத்தையே காணலாகின்றோம். விதண்டா வாதத்தைக் கடிகின்றவர்களிடத்தில் இப்பேயின் நடமாட்டத்தையே காண்கின்றோம். பொது ஸ்தானங்களிலும், அரசியல் சபைகளிலும், நியாய மன்றங்

களிலும், கல்விக் கழகங்களிலும் கண்காட்சி சாலை களிலும், இப்பேயின் பாழ்படு நடமாட்டமே காணக் கிடக்கின்றது. இத்தகைய நயமில்லாக் குழப்பத்திலும் ஆரவாரத்திலும், இளைஞர் மனம் கேடுறாமல் என்ன செய் யும்? காலநிலை இதுவாக, எந்தக் கல்விதான், மாந்தரைக் காக்க வல்லது ஆகும்? ஒருவேளை மக்களில் சிலர் அவர் களது இயற்கையான நல்லறிவினால், இப்பேயின் வயமாகா மல் காத்துக்கொள்ளலாம் என்றாலோ, பொதுஜன அபிப்பி ராய விரோதிகள் என்று அவர் நாடு கடத்தப்படலாம். சில சமயம் அவர்கள் சாகவும் நேரலாம்.

ஒரு பெரிய காரியத்தை ஒருவன் செய்து விட்டால், பொதுஜன அபிப்பிராயம் அவனைப் புகழ்கின்றது. வளர்ந்து வரும் இளைஞன் இத்தகைய புகழைப்பெற வேண் டும் என்று அவாவுகின்றான். நாடு பிடிப்பதும் அரசாள் வதும் பெரிய காரியங்கள் என்று கொள்ளப்படுகின்றது. எனவே, இளைஞன் ஒருவனுக்கு அக்காரியங்களைச் செய்து புகழ்பெற வேண்டும் என்னும் எண்ணம் ஏற்படுகின்றது. அந்த இளைஞனை அழைத்து, "ஐய, நீ முட்டாள். நீ நாடு பிடிப்பதும் அரசாள்வதும் பின்னர் ஆகட்டும். அவை பெரிய காரியங்கள் அல்ல." என்று கூறினால், அவன் சும்மா இருப்பானா? இயற்கையான நல்ல தன்மை உடைய ஒருவன், தத்துவ அறிவு பெற முயல்வானாயின், பொது ஜன அபிப்பிராயம் அவனை இடையில் கெடுத்து விடுகின் றதே. மேலும் அது அறிவுடையவர்களை அரசியல் வாதி களாகச் செய்து விடுகின்றது.

ஒரு நாட்டில் ஏற்படும் தீமைகளுக்கு எல்லாம் அரசி யல் வாதிகளே காரணம். அவர்கள் சிற் சில சமயங்களில்

பெரிய நன்மைக்கும் காரணமாய் இருக்க இயலும் என்று கூறு வாரும் உளர். அதை நான் அறிவேன். அறிந்த பின்னும், 'தீமைக்குக்காரணம் அரசியல் வாதிகள்தான்' என்று துணிந்து கூறுகின்றேன். அறிவுடையவர்கள் அரசியல் வாதிகளாய் மாறி விடுவதால் தத்துவ அறிவு புறக் கணிக்கப் படுகின்றது. பிறகு சிற்றினத்தவர் தத்துவ அறிவினது ஆட்சியைக் கைப் பற்றுகின்றனர். கருமான் ஒருவன் தான் அந்தஸ்த்தில் உயர்வதற்குத் தத்துவக்கலை நல்ல கருவியாகும் என்று எண்ணி, அவன் தன் ஆயுதங்களைப் போட்டு விட்டுத் தத்துவக் கலையின் உறவு பெற வருகின்றான். உயர்ந்த நிலையுடையவாகளால் புறக்கணிக்கப் படுவவதால், சிற்றினத்தாரின் உறவினில் தத்துவக்கலை இழிவுறுகின்றது. உண்மையான தத்துவக் கலையுணர்வு உடைய மேலோர் ஒரு சிலரே இருக்கின்றனர். அத்தகைய பெரியோர் உலகம் இருக்கின்ற அவல நிலையைக் கண்டு, அதனின்று தங்களைக் காத்துக் கொள்ளக் கருதித் தனிமையைத் தேடிச் சென்று விடுகின்றனர்.

தாழ்ந்த வகுப்பினரும் கைத்தொழிலாளரும் தத்துவக்கலை கற்க வருவதால், ஒரு நாட்டைக் கேடே வந்து சாரும். அவர்கள் கற்பதெல்லாம், தங்கள் செல்வம் செல்வாக்காதிகளை உயர்த்திக் கொள்ளவேதான். மேற்குல மக்கள் தத்துவக்கலை பயின்று பண்புற வேண்டும். அப்பொழுதுதான் நாடும், மக்களும் சிறப்படைய முடியும். நாடுகாக்கும் தொழிலைச் செய்வதற்கு சீருயர்ந்த வித்தகம் மிக மிக அவசியம்.

முற்றிய வித்தகம் கைவந்த பெரியோர்க்கு சுக துக்கம் என்னும் பேதம் ஒன்றும் இல்லை. எங்நிலையிலும் தளரா

மல் தனிநிற்கும் செவ்வியோர் அவர். விரும்பினும் விரும்பா விட்டாலும், நாட்டின் நன்மையைக் கருதி, அவர்கள் அத்தொழிலை மேற்கொள்ளும்படி மற்றவர் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாட்டிற்கும் மக்களுக்கும் உய்வுண்டு. மற்றும், அதற்கெதிர் நாடாள விரும்புபவர் வித்தகர் அல்லர். அவர்கள் நாடாள விரும்புவதாலேயே அத்தொழிலைச் செய்வதற்குத் தகுதி யில்லாதவர் ஆகின்றனர்.

நல்ல வாழ்க்கையே அரசியல் அதிகார ஆசையினும் பெரியது. அந்நல்வாழ்க்கையை நல்கி வைப்பது முற்றிய வித்தகம். எனவே, வித்தகமே ஆட்சி செய்வதற்கு உரியது. எனின் ஒன்று கேட்கலாம். எத்தகைய கல்வி முறையைக் கையாண்டால், நாடாள்வதற்குரிய வித்தகம் உடையவர் ஆகலாம் என்று என்னை நீங்கள் கேட்கலாம். இது பற்றி நான் கூறுவதற்கு அதிகம் ஒன்றும் இல்லை. ஒருவனது ஆன்மா இருளிலிருந்து நீங்கி வெளிச்சத்தை அடையும்படி செய்ய வேண்டும். இந்த ஆன்ம ஒளி விளக்கத்திற்கு உதவ வல்லதே நல்ல கல்வி. வித்தகத்திற்குத் தத்துவ அறிவோடு கணிதநூல் பயிற்சியும் வானநூல் பயிற்சியும் வேண்டப் படுவனவாகும். கணித சாஸ்திரம் புத்தியின் நுட்பத்திற்குத் துணை செய்யும். வான சாஸ்திரம் மனிதனை மண்ணினின்று உயர்த்தி வைக்கும் பெற்றியது.

105124

தத்துவக் கலையறிவு பெற்ற நல்லோர் ஓச்சிய செங்கோலின் பயனுக நன்னிலையில் நிலைத்திருந்த ஒரு நாட்டின் அரசியல் முறையும் மக்களின் வாழ்வும் சீர் குலைந்து போவானேன்? என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். நாடாள்வோரிடை ஏற்படுகின்ற மாறுபடு முரண்களினுல் அரசாங்க முறை கேடுறுகின்றது, என்னும் விடை பொருந்தும் இம்முரண்களுக்குக் காரணம் யாதென்று மீண்டும் கேட்பீர்களேயானுல், "கலைத் தெய்வங்காள் நீங்களே பாடுவீர்." என்று மஹாகவி ஹோமர் கூறியதுபோல், நாமும் இக் கேள்விக்கு விடை யொன்று அருளுமாறு, தெய்வங்களை வேண்டிக் கொள்வதன்றி வேறு வழி யில்லை.

எனினும் அத் தெய்வங்கள்தான் என்ன செய்யும்? மானுட வஸ்துக்கள் சாச்வதமானவை அல்ல வாதலின் ஒரு நாள் அவை அழிந்துபட வேண்டியவைகளே, என்று அத்தெய்வங்கள் கூறலாம். நல்ல நிலையிலிருக்கும் எந்த நாடும் ஒரு காலத்தில் இவ்விதியின்பாற் படாமல் இருப்பதற்கு இல்லை. சுழல்கின்ற விதியின் சக்கரம் மேலேயிருப்பனவற்றைக் கீழே கொண்டு வந்து சேர்க்காமல் இருப்பதற்கில்லை.

நிற்க, பிராணி உலகத்திலும், தாவர உலகத்திலும், "இந்தக காலத்தில் இது சூல்கொள்ளும். இந்தக்காலத்தில் இது குட்டிபோடும். இந்தக்காலத்தில் இது முளைக்கும், காய்க்கும், பழுக்கும்" என்னும் நிர்ணயம் இருக்கின்றது. மனிதனுடைய புத்தி இந்திரியங்களினுல் இயக்கப்படுவதனுல் காலமல்லாக் காலத்தில் அவன் மக்களைப் பெற்று

விடுகின்றான். நாம் நன்னிலை இழந்ததற்கு இதுவொரு முக்கியமான காரணம். இன்னபடி காலமல்லாக் காலத்தில் பெறப்படும் சந்ததிகளின் மனவளம் குறைகின்றது. மன வளம் குன்றியவர்கள் காப்பாளர்களாக அமையவே, நாடு நன்னிலை குலையாமல் என்செய்யும்? நாட்டின் அங்கங்க ளானநான்கு வகுப்பினர்களும் நிலை தடுமாறி வியவகரிக்கை யில், தங்கம்வெள்ளிஎன்னும் இனத்தவரானமுதல்இரண்டு வகுப்பினர்களுக்கும், பித்தளை இரும்பு இனத்தவரான கடை யிரண்டு வகுப்பினருக்கும் போட்டி ஏற்பட்டு, நாடு இருவேறு வழிகளில் இழுக்கப் பெறுகின்றது. கடைசியில் இந்த இறு வேறு வகுப்பினரும் மத்தியஸ்தமான ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்கின்றார்கள். இந்த ஒப்பந்த ஏற்பாட்டின்படி, பொருள் அதிகம் உடையவருக்கே செல் வாக்கு ஏற்படுகின்றது. முன்னிரு இனத்தவரும் காப்புத் தொழிலைச்செய்வதற்குத் தாங்களே உரியவர் என்று சொல் லிக்கொள்கின்றனர். பின் இனத்தவர், 'செல்வம் தமக்கு உண்டு, அச்செல்வத்தின் துணையினால் அரசாளும் செல் வாக்குத் தமக்கே உரியது' என்று இறுமாப்படைகின்றனர். எனவே இருசாரரும் சேர்ந்து, 'இவ்வளவு பொருள் உடை யவன்தான் நாட்டின் அரசியலில் அதிகார உரிமை பெறக் கூடியவன்' என்று வரையறுக்கின்றனர். அந்த ஏற்பாடு தான், கைப் பொருளுக்குச் செல்வாக்கை மிகவும் அளித்து முதன் முதலாக நாட்டின் நலத்தை கெடுக்கலாயிற்று.

'சொத்திற்கே அரசியல் செல்வாக்கு' என்ற ஏற் பாட்டை ஆங்கிலத்தில் டைமாக்ரஸி (Timocracy) என்று அழைப்பர். டிமாக்ரஸி (Democracy) என்பது வேறு. சொத்தும் அந்தஸ்தும் செய்து கொண்ட இந்த ஏற்பாட் டாட்டில், போட்டியும் சுய நலமும் வளர்தல் ஆயிற்று.

அதன் பயனாய்ச் சொத்தின் வன்மை தலை தூக்க ஆரம்பித்தது. இதனால், பொருள் சேமிப்பதற்காக மனிதன் வியாபார முயற்சியில் ஈடுபடலானான். இந்த வியாபார நாகரீகத்தின் முன், கல்வியும் மானுட நற்குணங்களும் அகல வேண்டியவைகளே. எனின், தத்துவக் கலைக்கு இவ்வேற்பாட்டில் இடம் ஏது?

இந்நிலையில் தத்துவ அறிவுடைய ஒரு மேன்மையோன் எங்காவது இருந்தாலும், அவன் சந்ததி அந்த நிலையில் இருப்பதில்லை. பெற்றதாயும் பிள்ளையைக் கெடுத்து விடுகின்றாள். அரசியலில் கலவாமல் கணவன் தத்துவ உணர்வினிற் குரிய தனிமையை நாடிச் செல்வதால், அவனுடைய அந்தஸ்து சமுகத்தில் குறைந்து விடுகின்றது எனவே, அவள் பிள்ளையை அழைத்து, "அப்பா, உன் தகப்பனார் சுயநலம் உடையவர். தனிமை தனிமை என்று சொல்லிக்கொண்டு முழுச் சோம்பலில் காலத்தைக் கழிக்கின்றார். நீயும் உன் தகப்பனைபோல் இருக்கக் கூடாது." என்று கூறுகின்றாள். இத்தகைய அற்பமான எண்ணங்கள் இளைஞரின் மனத்தில் வேர் விடவே, மாந்தர் படிப்படியாக இழிய வேண்டியதுதானே!

அந்தஸ்தும் வீரமும் உடைய முதல் இரு வகுப்பினரும், பொருள் படைத்ததால் உயர்வு அடைந்த கடையிரு வகுப்பினரும் செய்து கொண்ட ஏற்பாட்டில், பொருள் உடைமை என்பது முதல் ஸ்தானம் பெற்று, அந்தஸ்தையும் வீரத்தையும் இடமகற்றி விடுகின்றது. இதன் பயனாகச் செல்வம் உடைய சிலரது ஆதிக்கம் அரசாங்கத்தில் ஏற்படுகின்றது. செல்வமுடையார் செய்யும் ஆட்சி முறை ஆலிகார்க்கி (Oligarchy) என்பார்கள். இந்த ஏற்பாட்டில்,

பொருள் திரட்டும் போட்டி வாழ்க்கை யாகின்றது. இந்த அவசரத்தில், குலம் கல்வி பெருந்தகைமை ஆகியவை மடிகின்றன. எஞ்சுவன, ஆடம்பாமும், ஏழை, பணக்காரன், என்ற பொல்லாப் பிரிவினையுந்தான்.

இந்தப் பிரிவினால் எழும் தீமை பெரியது. இன்று ஒருவன், தனது மிதங்கடந்த ஆடம்பர வாழ்க்கையினால், சொத்தை இழந்து விடுகின்றான். நேற்று ஏழையாய் இருந்தவன் இன்று செல்வம் சேமித்து விடுகின்றான். ஏழையாய்ப் போனவனுக்குப் புதுப் பணக்காரன் மீது வன்மம் ஏற்படுகின்றது. இவ்வன்மம் வளர்ந்து, சண்டையிலும், குழப்பத்திலும் முடிகின்றது. இந்தக் குழப்பத்தில், ஏழையானவர் பெறும் வெற்றியானது ஜனநாயகம் என்ற பேர் பெறுகின்றது. இதை ஆங்கிலத்தில் டிமாக்ரஸி (Democracy) என அழைப்பர். எனவே வன்மத்தின் பயனாய் உருப் பெறுவது இந்த ஜனநாயகம்.

இந்த ஜனநாயக ஏற்பாட்டின்படி, ஏழை பணக்காரன் என்ற வேற்றுமை யில்லாமல் ஒருவன் அரசாங்கத்தில் அந்தஸ்துப் பெறுவது இயல்வதாகின்றது. "எவனுக்கும் எதையும் செய்ய உரிமை உண்டு. எல்லோரும் எல்லாம் ஆகிவிடலாம்." என்னும் எண்ணத்தை இந்த முறை வளர்த்து வைக்கின்றது. இது சொல்வதற்குச் சுவை யுடையதாக இருக்கின்றதேனும், இம் முறையில் கல்வியின் சீர்மை கெட்டு விடுகின்றது. கல்விக்கும் அறிவிற்கும் பதிலாக தேச பக்தி (Patriotism) என்பதுதான் ஒரு மனிதனது உபயோகத்தை நிர்ணயிக்கும் கருவி ஆகின்றது. தேச பக்தியின் ஆட்சியில் கல்விக்கு இடம் இல்லை கல்வி, குலம், குணம் ஆகியவைகளுக்குப் பதிலாகத் தேச பக்தி

இருந்தால் போதும் என்று மாந்தர் எண்ணத் தலைப்படுகின்றனர். சிற்றினத்தவனே ஆயினும், ஒருவன் தான் தேச பக்தி யுடையவனென்று தன்னை விளம்பிக் கொள்ளுவானாயின், அவன் எல்லா அறிவும் பெற்றவனாக மதிக்கப் படுகின்றான்.

இதுதான் ஜனநாயகம். மனிதனுக்கு மனிதன் வேற்றுமை யில்லை. எல்லாரும் எல்லாமும் ஆகலாம். நாளைக்குச் சிறைச் சாலைக்கு உரியவனாய் நிற்கின்ற ஒரு தீயவனும், இன்று தெருவிலே உரிமையுடன் தலை தூக்கி நடக்கலாம். கழுதையும் தன் சுதந்திர ஞாபகத்தோடு தலை நிமிர்ந்து நடக்கும். கழுதை, குதிரை, நல்லவன், முட்டாள், துஷ்டன் ஆகிய எல்லோரும் ஒன்றே. ஜனநாயகம் செய்து வைப்பது இதுதான். இறுதியில் இம்முறை "போட்டி கட்சி, கயமை, கோபம், மானமில்லாமை, கொடுமை ஆகிய தீமைகளை வளர்த்து, மனிதனைக் காட்டு மிருகங்களின் நிலைமைக்கு இழித்து விடுகின்றது.

---

செல்வம் உடையவனைக் கண்டு அஃதில்லாதவன் கொள்ளும் பொறாமையில் முளைக்கின்ற இந்த ஜனநாயகத்தின் வளர்ச்சி இறுதியில் கொடுங்கோன்மையில்தான் போய் முடிகின்றது. இது இயற்கையே இது எப்படி என்று சிறிது ஆய்ந்து பார்ப்போம். ஜனநாயக ஆட்சி முதன் முதலில் மனிதனிடத்தில் பொருள் சேமிக்கும் எண்ணத்தை வளர்த்தது. சேமிக்கும் முயற்சியில் உலோப குணத்திற்குத்தான் இடமுண்டு. ஆகவே, ஜனநாகம் முதலில் மனிதனை உலோபி ஆக்கியது. ஈகையாதி நற்குணங்கள் விடை பெற்றுச் சென்றன. உலோபி பணத்தைக் காக்கும் ஒரு பேயாவான். பொருளைக் காப்பதே கருமமாக உடையவன் அதைச் செலவு செய்ய மாட்டான். எனவே, மனிதன் சிக்கனமும் நிதானமும் உடையவனாய் ஆடம்பரம் ஒன்றும் இல்லாமல் வாழ்க்கையை நடத்தி வந்தான்.

ஆனால் அவனது சந்ததியோ செல்வத்தின் ஞாபகத்தில் வளர்கின்றது. பொருள் தேடும் வேலை செல்வவந்தனின் மகனுக்கு இல்லை, எனவே, மகனது மனம் சிற்றின்ப நுகர்ச்சிகளில் மெல்ல மெல்ல இழுக்கப் பெறுகின்றது. களியாட்ட வாழ்க்கைக்குச் சிற்றினத்தவரின் சேர்க்கை அவசியமாகின்றது. சிற்றினத்தவர் இச்சகம் பாடிக் கொண்டு அவனை மொய்த்துக் கொள்கின்றனர். இத்தகைய சேர்க்கையினில் ஒருவனுக்கு நல்ல தன்மைகள் எப்படி ஏற்படும்? அக்களிமகனும் ஒரு நாள் தகப்பன் ஆகின்றான். தகப்பனுடைய குணங்களைத்தனது பிறப்புரிமையாகக் கொண்டு தோன்றியுள்ள மகனும் களியாட்ட ஆடம்பரங்களில் இன்னும் சிறிது ஆழ்ந்து விடுகின்றான்.

கள், காமம் ஆகிய துர்க்குணங்களுக்கு அவன் இடம் ஆகின்ருன். காம வலையிலும் குடியின் பழக்கத்திலும் விழுந்தவன் கடைத்தேறுவது ஆவதொன்ருே? பித்தனே ஆகின்ருன் அவன். அப்பித்தனின் மகன் இன்னும் பெரிய பித்தன் ஆகின்ருன். அவன் மகன் இன்னும் அதிகம் இழியாமல் என்ன செய்ய முடியும்? இப்படி, வாலழயடி வாழையாக சந்ததி வளர்கின்றது. இப்படி வளரும் சந்ததியார் தங்கள் களியாட்டங்களுக்கு வேண்டிய செல்வம் தேய்ந்து தேய்ந்து குறையவே, எந்த வழியிலும் தங்களுக்கு வேண்டிய பொருளைத் தேடிக் கொள்ளலாம் என்னும் எண்ணம் உடையவர் ஆகின்றனர். இந்தச் சீர்கெட்ட கொள்கையைத் தொடர்கின்ற வஞ்சனை, கொலை, கொள்ளை, இச்சகப் பாடல் ஆயவை நிரந்தர தர்மங்கள் ஆகின்றன இறுதியில் நயத்தின் நலமில்லாக் குழப்பமே வாழ்க்கை யாகின்றது.

வாழ்க்கை இதுவாயின், பின், சிந்தனைக்கும் வித்தகத்திற்கும் நல் வாழ்க்கைக்கும் இடம் ஏது? இல்லாதவன் இருப்பவனைச் சுற்றிக் கொண்டு இச்சகம் பாடியோ மோசம் செய்தோ சம்பாதிக்க முயல்கின்ருன். ஏனெனில் எவ்வழியிலும் அவன் பொருள் தேடியாக வேண்டும். இச்சகம் பாடுபவனுக்கு இச்சகம் பாடச் சிலர் வேண்டும் அல்லவா? அன்னதற்குப் பொருள் வசதி அவசியமாகின்றது.

ஒருவன் தன்னிலும் பெரிய பணக்காரனைச் சேர்கின்ருன். அந்தப் பணக்காரன் இன்னும் பெரிய பணக்காரனைச் சேர்கின்ருன். தன் நலத்திற்கென்று செய்யும் காரியங்கள் எல்லாம் நியாயமும் தர்மமும் ஆகின்றன. பணத்திலும் செல்வாக்கிலும் பெருத்த ஒருவன் ஒரு சிற்றினக் கூட்டத்திற்குத் தலைவன் ஆகின்ருன். அவனை

யொத்த பணக்காரர் பலர் மற்றுமோர் பெரிய செல்வனை நாடி அவனது அடிமைகள் ஆகின்றனர். இறுதியில் கெட்டிக்காரன் ஒருவன் எல்லோரையும் அடிமைப் படுத்தி விடுகின்றான். இதுதான் கொடுமைகளுக்கு இடமாகிய ஓர் அரசியல் முறையின் வரன் முறை. பொதுநலம், சுதந்திரம், சந்தோஷம் என்று முழங்கிய ஜனநாயகம், சந்தோஷமும் சுதந்திரமும் இல்லா அடிமைகளையே வளர்ப்பதற்கு ஆதாரம் ஆகின்றது. எனவே, ஒன்று கூறுவேன். கூர்ந்து கேட்டு இவ்வாசகங்களை எங்கும் முழங்குங்கள் அதுவே நல்லவர் செய்யத் தக்கது. அரிஸ்டன் (Ariston) என்னும் பேரறிஞர் கூறுகின்றார்.

"நீதியையும் நன்மையையும் வாழ்க்கையின் முக்கியமான அம்சங்களாகக் கொண்டு வாழும் பெருமகனே மனித இனத்தில் அதிகமான சந்தோஷத்தையும் சுதந்திரத்தையும் உண்மையில் உடையவன். சிற்றினத்தார் கூட்டுறவும் களியாட்டப் பொருள்களும் ஒரு நாளும் சந்தோஷத்தைத் தாரா தன்னை அடக்கி ஆள்பவனே சுதந்திரம் பெற்றவன். நியாயத்திலும் நன்மையிலும் பயிலும் வாழ்க்கை உடையவனே தன்னை அடக்கி ஆளும் அரசன். மற்றவர்கள் தமக்கும் நாட்டிற்கும் கேட்டைச் சூழ்கின்றே அடிமைகளே ஆவர் அவர்களுக்குச் சந்தோஷம் என்பதே இல்லை."

இப்பொன்னுரையை ஏற்று அதனைப் போற்றி வாழ்வதே வாழ்க்கை. இதனை எத்தனை முறை வேண்டுமெனினும் வாய்விட்டுக் கூற நான் பின்வாங்க மாட்டேன் நல் வாழ்க்கையின் வித்தாகும் அப்பேரறிஞர் வாய்மலர்ந்த வாசகம். நெஞ்சத்து நல்லராய் வாழ்தல் இல்லையேல், பின், மக்கள் வாழ்ந்தும் வாழாதவர்; அன்றன்று செத்து அழியும் இழுதைகளே அவர்.

ஒரு நாட்டின் கண் அரசியல் முறையும் சமுகநெறியும் மாந்தர் வாழ்க்கையும் தன் நிலை கெட்டு இழிந்த விதம் இதுவென இது வரையில் கூறி வந்தேன். இவ்விழி வினிற்கு மற்றோர் காரணமும் உளது. அது மிகவும் முக்கியமான காரணம். அதை இனிக் கூறுவேன்.

சந்தோஷத்தை அடைய வேண்டும் என்பது முடிவான மானுட நோக்கம். மனித அமைப்பில் மூன்று விதமான முக்கிய அம்சங்கள் முன்று விதமான இயற்கையனவாய் இயங்கி, மானுட நோக்கமான சந்தோஷத்தைப் பெறுவதற்கு முயல்கின்றன. அறிவு (Reason), அவா (Passion), இச்சை (Desire) ஆகிய இவைகளே மேலே கூறிய மூல அம்சங்கள். கடையான இச்சை என்பது ஸ்தூலமாகிய சிற்றின்பங்களையே சரதம் எனக்கொண்டு வியகரிக்கும் இயல்புடையது. இரண்டாவதான அவா பேரிலும் புகழிலும் பற்றுக்கொண்டு வியவகரிக்கும் தன்மையது. முதல் இனத்ததான அறிவானது விஷயத்தின் வாய்மையைத் தேடித்தெரிந்து வாழ்கின்ற நோக்கம் உடையது. அது புகழையும் பொருளையும் மதிப்பதில்லை.

மேலே கூறிய இம்மூன்று மூல அம்சங்களும் அந்த அந்த அமசத்தின் இயல்பினிற்குத் தக்கபடி மனிதனுக்கு சந்தோஷத்தை முவ்வேறு முறைகளில்தருகின்றன. அவைகளில் எந்த அம்சம் ஒருவனிடம் அதிகமாய் இருக்கின்றதோ, அதனுடைய இயல்பின் வழிதான் மனிதன் பயில்கின்றவன் ஆகின்றான். இன்னபடி முவ்வேறு அம்சங்களால்

இயக்கப் பெறும் மூன்று விதமான இயல்புகளை உடைய மனிதனை அழைத்து, "ஐப, உங்களில் எவர் சிறந்தவர்?" என்று அவர்களைக் கேட்போமாயின், ஒவ்வொருவனும் தனது இயற்கையே உயர்ந்தது என்றும், சந்தோஷம் அதனில் தான் இருக்கின்றது என்றும் கூசாமல் கூறுவான்.

சிற்றின்பத்திலும் பொருள் ஈட்டுதலிலும் நோக்கம் உடைய மூன்றாவது இனத்தவன் அறிவினது பயனற்றதன்மையையும், அதற்கெதிர் பெருளுடைமையால் ஏற்படுகின்ற நன்மைகளையும் எடுத்து அவன் நெடிது நீட்டுவான். இரண்டாவதான இயற்கை விசேஷம் உடையவன், "போரினிற்கும் புகழினற்கும் அறிவு உதவாதெனில் அதனால் யாருக்கும் எப்பயனும் இல்லை" என்று கூறிவிடுவான். அறிவினால் இயக்கப்படும் மனிதனோ விஷயவாய்மையைத் தெரிவதே வாழ்வின் பயனென்றும், மற்றவை ஒரு வேளை வாழ்க்கைக்கு அவசியமாயிருக்கலாம் எனினும், முடிவான நன்மையை அவை ஒரு நாளும் அளிக்கமாட்டா என்றும் உறுதியொடு கூறிவைப்பான்.

மூன்று விதமான இயற்கையுடைய இவர்களில் சிறந்தவன் யாவன்? இவர்களில் எவன் அகன்ற அனுபவத்தையும், உண்மையான அறிவையும் உடையவன்? அறிவினது உறவினில் செழித்து வளர்பவன் இளமையில் அனுபவித்த சிற்றின்பத்தாலும், போராலும் புகழாலும் வரும் சந்தோஷத்தை ஆராய்ச்சி செய்து, சந்தோஷம் என்பதின் மெய்த் தத்துவத்தை அறிகின்றான். அறிந்து விஷய வாய்மை கைவரப் பெறுவதால் விளைகின்ற ஓர் எல்லையற்ற இன்பத்தின் முன், மறறவை பொருளற்றதாகி ,விடுந் தன்மையன என்பதை ஐயமறத் தெரிந்து கொள்கின்றான்.

அவனுக்குப் பேர் புகழ் என்னும் பெருமையும் இல்லாமற் போகவில்லை. அவன்தான் வாழ்வின் உண்மையை உணர்ந்து வாழ்பவன். எனவே, மனிதப் பெருமையை நிர்ணயிப்பதற்குரிய கருவி அவனே ஆகின்றான். அவனைக் கொண்டு மற்றவர்கள் அளக்கப் படுவார்களே யன்றி, மற்றவர்களைக் கொண்டு அவனை அளப்பது என்பது எந்நாளும் இல்லை. இது அவனுக்குப் பெருமையைத் தரவில்லையா? அம் மேன்மகன் பெருமை யென்ற ஒன்றை நாடுவதில்லை. எனினும் மெருமையை அளக்கும் கருவி அவனாக அமைகின்ற ஒரு பெருமையோ அவனது ஆகின்றது. இது ஏன் எனில், அப்பெரு மகனுடைய கருவி அறிவு. மற்றவர்கள் கையாளும் கருவிகள், அற்பப் பொருள்களும், புகழ்ச்சியும், அவாவும் ஆகின்றன. எனவே அவனது பெருமையே உண்மையானது. முதல் அம்சமான அறிவின் இயக்கத்தால் பெறப்படும் சந்தோஷமே களங்க மற்றதும் நிறைவு உடையதுமான சந்தோஷம். அவன்தான் நிர்ணயத்தின் நிர்ணயம். மற்றவான இரு இயல்புகளால் இயக்கப்படுவர் இழிந்தவர்களே "முற்றிய வித்தகத்தால் பிறப்பதே சந்தோஷம். மற்ற வெல்லாம் நிழலைப் பொருள் என்று கொள்ளும் மயக்கமே" என்று ஒரு தத்துவங் கைவந்த ஞானி என் காதிலே ஓதுகின்றார்.

பொதுவாக நாம் துன்பம் இல்லாத நிலையை சுகம் என்றும், அந்த சுக நிலை அகன்றக்கால் துன்பம் என்றும் கொள்கின்றோம். இந்திரியங்களைக் கொண்டு சுக துக்கங்களை நாம் அளப்பதால் ஏற்படும் கொள்கை இது. எனின் இருக்கின்ற ஒரு துன்ப அகல்வை சுகம் என்று கொள்ள நேர்கின்றது. இத்துன்பத்தின் தொடர்பு இல்லாத இன்பம் இவ்வுலகில் உண்டு. அதுதான் ஆன்ம சந்தோஷம். அது வளரும் அறிவினில் ஏற்படுவதால் எத்துணையும் துன்பக் கலப்பில்லாத நிரந்தர இன்பத்தை நல்குகின்றது. உலகத்திலே பற்று வைத்து வியவகரிப் பவர்களுக்கு, உண்மையான சந்தோஷ நிலை என்பது ஒன்று கை கூடுதல் அருமையாகும். உலகத்தினிடம் பற்றுடையார் உறும் சந்தோஷத்தில் துன்பத்தின் கலப்பு இல்லாமல் தீராது. நோயில்லா நிலையின் சுகம் நோயுற்ற காலையில்தான் தெரிய வரும். உலக நடமாட்டத்தில் சுக துக்கம் அவசியமாகின்றன. வித்தக இன்பமோ துன்பக் கலப்பில்லாத் தூய்மை உடையது.

இத்தூய்மையான வித்தக நிலையினால் ஏற்படும் சந்தோஷம், மற்றிரு இனத்தவரின் இயற்கையில் இல்லை. எனவே அவாவினாலும், இச்சையினாலும் இயக்கப்படும் சிற்றினத்தவர் நிழல்களை சந்தோஷத்திற் குரியவைகள் என்று தொடர்ந்து திரிகின்றவர் ஆகின்றனர். அவா இச்சை என்னும் இரு இயற்கைகளும் இளைஞர்களைச் சாரா வண்ணம் காத்தல்மிக அவசியமாகும். அன்னதற்குத் தன்னடக்

கம் தருகின்ற கல்வியை இளைஞர் பயிலுமாறச் செய்ய வேண்டும். இத் தன்னடக்கம் என்னும் உயரியத் தத்துவம் தம் வாழ்வினில் எய்தப் பெற்றவரே சீரிய வாழ்க்கையினர் ஆவர்.

நாளுக்கு நாள் ஒருவன் தீயவன் ஆவானேல், அவன் உலகமெல்லாம் கட்டியாளினும், அவன் அடைந்த பயன் தான் என்ன? ஒரு பயனும் இல்லை. நல்லறிவையே, வித்தகம் உடையவன் மிகவுயர்ந்த பொருளாக எண்ணுவான். பொருள் ஈட்டும் இடத்தும் அவனுகத ஓர் ஒழுங்கும் முறையும் உண்டு. பணத்தைக் குவியல் குவியலாகச் சேர்த்து வைப்பதை அவன் விரும்ப மாட்டான். ஏனெனில் சேரும் இப்பொருள் அவனது ஆன்ம நயத்தைக் குலைத்து விடும். பேரையும் புகழையும் அவன் நாடமாட்டான். அவை வந்து அவனைச் சேரினும், அளவோடுதான் ஏற்பான். தன் நல் வளர்ச்சிக்குக் கேடாக அவை அமையும் என்ற தோன்றினல், அப்பேரும் புகழும் தன்னை வந்து சேராமல் காத்துக் கொள்வான். சுருங்கச் சொல்லின் அவன் ஒருநாளும் அரசியல் வாதியாக மாற மாட்டான்..........என்று கூறிக் கொண்டிருக்கையில், அவரோடு பேசிக் கொண்டிருந்த ஒரு நண்பர், "நீங்கள் கூறும் நோக்கத்தைத் தழுவிய நாட்டில்—அதாவது இப்பூலோகத்தில் இருப்பதற்கு இயலாத நாட்டில்தான்—அத்தகைய மனிதன் இருப்பான் என்பது உங்கள் கருத்தோ." என்று கேட்க, "ஆம், நான் கூறுவது போன்ற ஒரு நாடு பூலோகத்தில் இருப்பதற்கு இயலாததாகவே போகலாம். எனினும் அத்தகைய நாட்டினைப் பூலோகத்திற்கு அழைத்து அமைக்க விரும்புவோர், அத்தகைய நாடு அமைவதற்கு

ஏற்றபடி தங்கள் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்வர். நான் வகுத்த முறையைத் தழுவிய ஒரு நாடு இருக்கலாம் அல்லது இல்லாமற் போகலாம்; அது பற்றி நமக்குக் கவலை இல்லை. வித்தகம் உடையவன் அந்த கைய நாட்டின் முறைக்குரியபடி நடந்து கொள்வானே யன்றி வேறு ஒன்றும் செய்ய மாட்டான்.'' என்று எதிர் மொழிந்தார்.

# முடிவுரை

நிழலைப் பொருள் என்று மயங்கி, சத்தியம் எனபதைத தெளியாமல் மாந்தர் சுழலிற்பட்டு துரும்பென உழல்கை யில், பெருமகன் பிளேட்டோ, தன் குருதேவராம் சாக்ரடீ ஸின் கருத்தைத் தொகுத்துக் குடிவாழ்க்கை என்னும் இந்நூலைச் செய்தார். இந்நூலின் கருத்தைத் தெரிந்து கொள்வதற்குக் கிரேக்கிய சரித்திரத்தைச் சிறிது நாம் தெரி தல் அவசியமாகும்.

பண்டைக் காலத்தில் கிரேக்கர் வசித்த நாட்டை ஹெல்லாஸ் என்று அழைத்தனர். இப்பொழுது கிரீஸ் என்று அழைக்கப்படும் நிலப் பரப்பும், துருக்கியின் சிறு பாகமும் சேர்ந்து பண்டைய ஹெல்லாஸ் ஆகும். அந்த ஹெல்லாஸ் நாடு பல சிறு நகரங்களாகப் பிரிந்து, ஒவ் வொரு நகரமும தனித் தனி அரசாட்சி உடையதாய் இருந்தது. ஆரம்பத்தில் இந்நகரங்கள் நல்ல நிலையில் தான் இருந்தன. நாள் செல்லச் செல்ல வெளி நாட்டுப் போரும் உள்நாட்டுக் குழப்பமும் அரசனது ஆளுகையை விலக்கிக் குடியரசு நாடுகளாக மாற்றின.

குடியரசு ஆட்சிமுறை உள்நாட்டில் கட்சிப் பிரி வினைகளையும், அதன் பயனாய குழப்பங்களையும் வளர்த்து வைத்தது. இந்தக் குழப்பம் அரசியல் வாதிகளின் வளர்ச் சிக்குத் துணை செய்தது. அரசியல் வாதிகளின் வளர்ச்சி யைத் தொடர்ந்த பல சிறுமைகள், மக்களை நன்னிலையி லிருந்து இழியச் செய்தன. மெல்ல மெல்லப் பண்டை

வாழ்க்கையின் நியதியும் ஒழுக்கமும் மறைந்தன. களி யாட்டு அயர்வதே மக்களின் கருமம் ஆயிற்று.

இதற்குப் பண நடமாட்டம் அவசியம் ஆதலால், வர்த்தகத்தைப் அதிகம் பெருக்குவதில் ஊக்கமும் முயற்சி யும் அதிகமாயின. மனிதனுடைய மனப்போக்கில் இந்த வியாபார முயற்சி பெரு மாறுதலை உண்டாக்கிற்று. மாறிய மனப்போக்கிற்கு ஏற்றபடி அரசாங்க முறைகளும் மாறலா யின. நாட்டின் சட்டதிட்டங்களிலும் மாறுதல்கள் ஏற்பட் டன. பெருந்தகைமைக்குப் பதிலாகப் பொருளே மதிப்பிற் குரியது ஆயிற்று. இங்நிலையில் பிளேட்டோ, மாந்தர் அடைந்து வரும் இழிவைக் காணப் பொறுமல், நிரந்தர இன்பமும், நீதியும், நன்மையும் இந்நிலவுலகில் எங்கெங் கும் நிலைத்திருக்க என்ன செய்வது என்று இரவும் பகலும் எண்ணத் தலைப்பட்டார். அவரது சிந்தனையின் பயனாய்க் குடிவாழ்க்கை என்னும் இப்பெருநூல் பிறக்க லாயிற்று. பிளோட்டோவின் குருதேவரான சாக்ரடீஸ் என்னும் தத்துவஞானி அவ்வப்போது கூறி வந்தவைகளை அஸ்திவாரமாக உடையது இந்நூலில் கூறப் பெற்றுள்ள கருத்துக்கள்.

பிளேட்டோ இருந்த நாளில் ஏதன்ஸ் என்னும் நகர மும், ஸ்பார்ட்டா என்னும் நகரமுந்தான் சிறந்த நிலையில் இருந்தன. ஆனால் ஏதன்ஸ் நகர் வாழ்ந்த மாந்தரின் களி யாட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட இம்மாறுதல், சமுகத்தை யும் அரசாங்கத்தையும் மிக விரைவில் மாற்றி வைத்தது. எங்கும் சாமர்த்தியமும் பொருளுடைமையும் தலை தூக்கி ஆடவே, நியாயம், நன்மை, சத்தியம் ஆகிய நன்மைகள் கெட்டழிந்தன.

ஏதன்ஸின் நிலை இதுவாக, ஸ்பார்ட்டா நகரோ, பண்டைக் கட்டுப் பாட்டினின்றும் மாறுமல் இருந்தது. அன்னதற்குக் காரணம் "அந்நாட்டில் அமைந்திருந்த அரசியல் முறையும், ஜனங்களிடமிருந்த கட்டுப்பாடும், எளிய வாழ்க்கையுமே." என்று பிளேட்டோ எண்ணி ஞர்.

இனி, ஸ்பார்ட்டாவில் நிலவிய வாழ்க்கை முறையும், அரசியல் நெறியும் எத்தன்மையன என்று சிறிது தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்பார்ட்டாவில் இருந்த மக்களின் வாழ்க்கையில் ஆடம்பரம் இல்லை. பொருளுடைமைக்கும், அம்முறையில் மக்களுக்கு சுதந்திரம் இல்லை. அங்கு எல்லோருக்கும் எல்லாம் பொது. கல்யாணம், கல்வி, குழந்தை வளர்த்தல் எல்லாம் அரசாங்கத்தின் நிர்ணயத் திற்குக் கீழானவை. சுருங்கச் சொல்லின் ஸ்பார்ட்டா ஓர் இராணுவ நிலயத்தைப் போல் இருந்தது. அதில் வாழ் பவர் இராணு வீரரைப் போல் ஒரு கட்டுப் பாட்டின் கீழ் வாழ்ந்தனர்.

அங்கு இளம்பிராயத்தினர், வயது முதிர்ந்தவர் களிடம் அடங்கி வினைய முடையவர்களாய் இருத்தல் வேண்டும். செல்வத்திற்குப் பதிலாக அங்கே வயதே மதிக்கப் பெற்றது. அங்கே கல்வி விஷயம் அரசாங்கத்தின் மேற்பார்வையில் இருந்தது. கல்வியில் புதிய முறைகள் எதுவும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளத் தனி உத்தி யோகஸ்தர்கள் நியமிக்கப் பெற்று இருந்தனர். கடவு ளின்மேல் பாடப் பெற்ற பாக்களைத்தவிர வேறு புதிய பாக்கள் ஸ்பார்ட்டாவில் நுழைய இடம் கொடுக்கப்பட

வில்லை. எனவே, ஹெல்லாஸில் உள்ள மற்ற நாடுகளில் ஏற்பட்ட இழிவு ஸ்பார்ட்டாவில் ஏற்படவில்லை.

இழிவுறு இந்நிலைக்குக் காரணம், நிர்ணயமான அரசாங்க முறையும், ஜனங்களிடம் இருந்த சிறந்த கட்டுப்பாடும் என்று பிளேட்டோ கண்டார். எனினும் தத்துவ அறிவு முதிர்ந்தவரும், வித்தக எல்லையையும் கடந்த பேரறிஞர் என்று போற்றப்படும் சாக்ரடீஸின் முதல் சீடரும் ஆனபிளேட்டோவிற்கு, இத்த இராணுவ நிலை வாழ்வு முழுதும் ஏற்கக் கூடியதாகத் தோன்றவில்லை. கட்டுப்பாடு உடைமையோடு, சிறுமையின் தொடர்பில்லாத ஒரு தூய மன நிலையும், ஒரு சமுகத்தின் நன்மைக்கு, இன்றியமையாதது என்று அவருக்குத் தோன்றியது. எனவே ஸ்பார்ட்டன் முறையும், அதனை மிகநெருங்கி ஆராய்ந்த அவரது வித்தகமும் சேர்ந்து வகுத்த ஒரு முடிவாகும் குடிவாழ்க்கை என்னும் இப்பெருநூல்.

ஒரு நாட்டில் இன்பத்துடன் வேண்டப் படுவனவான எல்லா நலங்களும் ஒருங்கே அமைந்து, மக்கள் அனைவரும் வாழ்வாங்கு வாழ வேண்டுமாயின் அரசியல் வாதமும், பொருளுடைமையும், அரசாங்க மாறுதலும் இருத்தலாகா என்றும், முற்றிய வித்தகம் உடைய பெருந்தகை யாளரே அரசாங்கத்தை நடத்த வேண்டும் என்றும் பிளேட்டோ முடிவாக எண்ணினர். ஸ்பார்ட்டாவின் முறையை அவர் ஏற்றார் எனினும், கட்டுப் பாட்டினுல் மாத்திரம் இயக்கப் பெறும் ஒரு முறை நீடித்திராது என்று அவருக்குப் பட்டது. அது உண்மையும் ஆயிற்று. எந்த முறை ஸ்பார்ட்டாவைச் சிறந்து விளங்கச் செய்ததோ, அம்முறையே இறுதியில் அந்நாடு சீர்குலைந்து கெடுவதற்கும் காரணமாய்

அமைந்தது. கூட்டினிற் படுத்திய ஒரு பறவை, தனது ஆகாச விடுதலை பெற அமையம் நோக்கியே இருக்கும் அல்லவா ?

எனவே, சட்ட திட்டங்களில் அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. வித்தகம் முதிர்ந்த பெரியோர் சிலரால் இயக்கப் பெறும் அரசாங்கமே, சட்ட திட்டங்களின் துணையில்லாமல் நடக்க வல்லது. ஏனெனில், அப்பெரியோரின் மனம் எந்நாளும் நன்மையிலும் தர்மத்திலும் நிலைத்திருக்கும். வித்தகமே அவர்களுக்கு இன்பம் ஆவதால், இன்பத்திற்குரிய பொருள் என்று எதையும் அவர் தேடமாட்டார். சுயநயம் என்பது அம்மேன் மக்களின் இயற்கைக்கு அயலானது. சமூகத்தின் நலமே அவர் நலம். தர்மமே புகுந்து ஆட்சியைச் செய்யுமாயின் பின் சட்டமும் திட்டமும் எதற்கு? எல்லோரும் எங்கும் இன்புற்றிருக்க வேண்டும் என்னும் நன்னினைவில் நடைபெறும் ஆட்சி முறையில் நன்மையேதான் நிலைக்கும். எனவே வித்தகம் உடையோர் தலைமையில் பிளேட்டோ அரசாங்கத்தை நிறுவுகின்றார்.

பின்னர், அத்தகைய மேன்மையோர் தலைமையில் நிலைக்கும் அரசியல் முறையில் வசிக்கின்ற மக்களின் இடமும் போக்கும் இவையென வகுக்கின்றார் அவர். அரசாங்கத்தின் முக்கியமான அங்கங்கள் மக்களாவர். மக்களுடைய நன்மைக்கே ஆட்சி இருப்பதால், அந்த அங்கங்களின் நிலையும் முறையும் இது வென்றும், அந்நிலை பிறழ்ந்து அவர் நடவாமல் பார்த்துக் கொள்வதே அரசாட்சியின் முக்கியமான வேலை யென்றும், அவர் எடுத்துக் காட்டுகின்றார்.

அன்னதற்கு, அவர் மக்களை நான்கு வகுப்புக்களாகப் பிரித்து, அவ்வகுப்புக்களுக்குரிய இடமும் தொழிலும் இது இது என வரையறுக்கின்றார். இது நம் நாட்டில் ஒரு காலத்தில் செழித்துச் சிறந்து விளங்கிய வர்ணாச்ரம தர்மத்தை ஒருவாறு ஒக்கும். பிளேட்டோவின் கருத்தின்படி, மக்கள் அவரவரது இயற்கைக்குத் தக்கபடி நான்கு வகுப்பினராய்ப் பிரிகின்றனர். அந்த நான்கு வகுப்பினரும் வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலிய தொழில்களை மேற்கொள்ள வேண்டியவர். பின்னிரு இனத்தாருக்கு அரசாட்சி விஷயத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்பதும், இருக்கவும் கூடாது என்பதும் பிளேட்டோவின் முற்றிய கருத்து. நான்கு வகுப்பினரும், தங்களது வகுப்பினிற்கு உரியவான காரியங்களை முறையே கடமை யெனச்செய்து வருதலே நாட்டின் நலத்திற்கு வித்தாகும் என்று அப்பெருமகன் வற்புறுத்துகின்றார்.

ஒரு மனிதனுக்கு உண்பதற்கும், உடுப்பதற்கும் அவனவனது தொழிலிற்கு உரிய கருவிகளையும் சாதனங்களையும் தேடிக் கொள்வதற்கும் எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவிற்குமேல் அதிகமான பொருள் இருத்தல் ஆகாது. எனவே, பெரிய வியாபாரங்களைச் செய்து பொருளைத் திரட்டுவதற்குப் பிளேட்டோவின் முறையில் இடம் இல்லை. அவரது முறையின்படி, பொருளுடைமையும் வியாபாரமும் சமுகத்திற்கு வேண்டா. மாந்தர் தமது கடமையைச் செய்து, அப்படிச் செய்வதில் மகிழ்வடை வாராயின், பின் அந்த சமுகத்திற்குப் பொருளின் அவசியம் எவ்வாறு ஏற்படும்?

மனிதனுக்குத் தனியான நன்மை என்பதும் இன்பம் என்பதும் இல்லை. சமுகத்தின் நலமே தனிமனிதனின்

நலம். அந்த நலந்தான் துன்பத்தின் கலப்பில்லாத நலம். மற்றவை யெல்லாம் இன்பமென்று கொள்ளும் துன்பந் தான். தனி நலம் என்பது மனிதனைச் சுயநலம் உள்ள வனாகச் செய்து, காமக்குரோதாதிகளை வளர்த்து, சமூக வாழ்க்கையை இசை கெடச் செய்யும். மேலும் தனி நலம் என்பது ஒரு பொய். இன்பம் என்பது மனத்தின் ஒரு நிலை. இந்நிலையில் ஏற்றத் தாழ்வு என்ற வேற்றுமை இல்லை. ஒவ்வொரு மனிதனும் தனது கடமையைச் செய் வதால் ஏற்படும் சந்தோஷமே உண்மையான சந்தோஷம். நாடாள்வது முதல், செருப்புத் தைப்பதுவரை எல்லாம் கடமையின் பாற் பட்டவை. கடமையைச் செய்வதிலே தான் சமத்வ தர்மம் எழுகின்றது என்று பிளேட்டோ முடிவு கட்டுகின்றார்.

நல்ல அரசியல் முறை நிலைத்திருப்பதற்கு அரசாங் கத்தை நடத்துகின்றவர் கவனிக்க வேண்டுவதும் ஒன்று இருக்கின்றது. நல்ல பயிர் விளையும் நிலத்தில் அடிக்கடி அப்பயிர்களை அழிக்கக் கூடிய சிறு பயிர்களும் முளைப்பது உண்டு. அப்படி உண்டாகும் களைகளைப் பிடுங்குவது, நல்ல பயிரின் வளர்ச்சிக்கு எவ்வளவு அவசியமோ, அதுபோல் சமூகத்தில் ஏற்படும் சிறு களைகளை அவ்வப்போது அர சாங்கம் களைந்து அகற்றுவதும் அவசியமானது. அன்ன தற்குக் கல்வி அவசியம். எனவே, கல்வி முறையில் அர சாங்கத்தார் கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டும். கல்வி முறையில் மாறுதல் ஒன்றும் ஏற்படல் கூடாது. கல்வி முறையில் ஒரு புது மாறுதல் ஏற்படுமேல், அது வெகு விரைவில் மக்களின் மன நிலையில் ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தி விடும். கல்வி எப்பொழுதும் பண்டைய முறை யிலேயே தரப்படல் வேண்டும். கொடுக்க வேண்டிய கல்வி

யும் சங்கீதம் உடல் பயிற்சி, சீரிய இலக்கியம், தத்துவக் கலை ஆகியவைகளே. இத்துடன் கணிதநூல் பயிற்சியும், வான சாஸ்திரப் பயிற்சியும் அவசியம் ஆகும். கணித சாஸ்திரமும் வான சாஸ்திரமும் புத்தி நுட்பத்தையும் மேல் நோக்கத்தையும் தர வல்லன. இத்தகைய பயிற்சி யுடையவரின் மனம் மண்ணிலும் பொன்னிலும் கிடந்து உழலாது என்று பிளேட்டோ கூறுகின்றனர். கல்வியின் நோக்கம் தன்னடக்கமே. அத்தன்னடக்கமே வித்தக வாழ்வின் வித்து. ஆகவே, கல்விமுறையில் தடுமாற்றம் இல்லாத பாதுகாப் அளிப்பது அரசாங்கத்தின் வேலை களில் முதன்மையானது.

இத்தகைய முறையுடைய ஆட்சியில் நாடும் மனி தனும் உயர்ந்து உய்வது சரதம். இந்நாள் உலகம் உற்றுள அவலநிலைக்கு எல்லாம் காரணம் மனிதன் உரிமையின் பால் கொண்டுள்ள பற்றுத்தான். அந்த உரிமை, சுயநலக் கருத்தை மனிதனிடம் வளர்த்து வைக்கவே, அத்தன் நலத்தைத் தேடிக் கொள்ளும் வழியில் கையாளப் பெறு வன வெல்லாம் நியாயமே என்று எண்ணப் படுகின்றது. எனவே நியாயம் என்பது தனது நலனை அளக்கும் ஒரு கருவியாகின்றது அன்றி, அதற்குரிய செம் பொருளை அது மேற் கொள்வதில்லை. நியாயம் என்பது எந்நிலையிலும் யாருக்கும் தீமை புரியாது என்பதை சுயநலம் தெரிந்து கொள்வதில்லை,

சுயநலத்தைச் சார்ந்து வரும் போட்டியும் வஞ்சனை, கொடுமை, கோபம் முதலியவைகளும் புதிய சட்டங்களைப் போட வேண்டிய அவசியத்தை உண்டாக்குகின்றன. உடனே சுயநலம், அச்சட்டங்களினின்றும் தப்பும்

பொருட்டுச் செய்கின்ற காரியங்களை யெல்லாம் நியாம் போல் தோற்றுவிக்கின்றது. இதனால் புதிய நிலைகள் ஏற்படுகின்றன. ஏற்படும் புதிய நிலைகளைப் புதிய புதிய சட்டங்கள் தொடர்கின்றன. இறுதியில் நியாயத்திற்குப் பதிலாகச் சட்டமே அரசாட்சி ஆகின்றது. பின், சட்டத்தினின்றும் தப்புகின்ற சாமர்த்தியமே குடிவாழ்க்கையின் நோக்கமாய் முடியாமல் என் செய்யும்? இந்த சாமர்த்திய சித்திரத்தில் ஆன்மாவுக்கும் கடவுளுக்கும் இடம் கிடைப்பது இல்லை. கடவுளும் ஆன்மாவும் இல்லாத இடத்தில் உண்மையான சந்தோஷத்திற்கு இடம் இல்லையே.

உன் சந்தோஷம் என் சந்தோஷம் என்னும் வியவகாரத்தில் துக்கம் பெருகுவது அல்லால் வேறு என்ன நிகழ்தல் கூடும்? துன்பம் வாழ்வு அன்று. வித்தக நிலையே நிலையுடைய சந்தோஷம் தரவல்லது. அந்நிலை சீரிய கல்வியாலும் கடமையைச் செய்வதாலும், அடக்கத்தாலும் ஏற்படக் கூடியது. நாட்டின் நலத்திற்கு ஜனங்களிடைக் கடமையின்பால் பற்று உண்டாகும்படி மனம் மாற வேண்டும். கடமையின் கண் தோய்ந்துள்ள கலப்பற்ற சந்தோஷத்தைத் துய்ப்பதற்குப் பயிற்சி ஜனங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அப்பயிற்சியைத் தருவது தத்துவ ஞானமே.

•

ஒரு நாட்டில் அமைதி யமர்ந்த நன்னிலை நிலைப்பதற்கு வித்தகர் பாதுகாப்பும், தூய நினைவினை யுடைய சான்றோரின் பெருக்கமும், புதிய மாறுதல் இல்லாக் கல்வியும், சொத்தின்பால் நாட்டம் இல்லாமையும் அவசியமாகின்றன. அன்னதற்கு, இயல்பிற்கும் தொழிலுக்கும் தக்க

வான வகுப்புப் பாகுபாடுகள் அவசியம். மாந்தர் தம் தம் வகுப்பினிற்கு உரிய தொழிலைப் புரிந்து ஓய்வு நேரங்களில் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுதல் வேண்டும். இதுதான் பிளேட்டோவின் முற்றிய முடிவு. இந்த முடிவினேடு இணங்காத எந்த ஏற்பாடும் நன்னிலையை ஒரு நாளும் தாராது.

பண்டை இந்தியாவும் இதனையே கூறிற்று. வித்தக முடையவனே அரசனக இருந்தான். அவன் தொழில் நாடு காத்தல். ஒரு வகுப்பினர் தத்துவத்துறை தோய்ந்து வாழ்ந்தனர். அவர் தொழில் ஓதலும் ஓதுவித்தலும் ஆகும். அவர் ஒழிந்த பின் இரண்டு இனத்தவர் வர்த்தகம், கைத்தொழில், வியவசாயம் முதலிய தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். எல்லோரும் தங்களுக்குரிய கடமையில் தலை நின்று, பணக்குவியலையும் சுகப்பொருள்களையும் நாடாமல், கடவுள் நினைவினில் இனிதே அமர்ந்து அமைதியோடு வாழ்ந்தனர்.

ஒவ்வொரு வகுப்பினரும் தமக்குரிய தொழில்களைச் செய்து, அத்தொழிலை ஏற்பதற்கு சந்ததி ஏற்பட்டவுடன், அவர் எல்லாக் கடமைகளினின்றும் விலகிக் கானகம் எய்திக் கடவுளைப் பற்றினர். எனவே தர்மம் எங்கும் தழைத்திருந்தது.

ஏதன்ஸிலும், இந்தியாவிலும் வித்தக மெய்ந்நிலை எய்தியவர் காணும் முடிவு இறுதியில் ஒன்றே ஆகின்றது. இத்தகைய நிலை இனி இயல்வதொன்றோ? என்று ஒருவர் கேட்கலாம். பிளேட்டோவின் நண்பர்களும் அயிர்த்தனர். அன்னதற்குப் பிளேட்டோ கூறிய பதில் வருமாறு:—

"நான் சித்தரித்து உரைத்த இது போன்ற ஒரு நாடு பூலோகத்தில் இருக்க இயலாத ஒரு நாடு ஆகலாம். அதனால் என்? அத்தகைய தெய்வச் சிறப்புடைய ஒரு முறையை இவ்வுலகினில் அழைத்து அமைக்க விரும்புவார் மேலோர். அத்தகைய ஒரு நாட்டின் குடிகளாய் அமைவதற்குத் தக்கபடி தம் வாழ்க்கையைத் திருத்திக் கொள்ள முற்படுதலே மேலோர் முறை. அதுவே வித்தகத்தின் இயல்பு. வித்தகம் எய்தியவன் வாழ்க்கையை இவ்வண்ணம் திருத்தி அமைத்துக் கொள்வானே யன்றி, அது முடியக் கூடியது ஒன்று, அன்று? என்று கேட்டும் அயிர்த்தும் தடுமாறி நலம் குலைந்து போக மாட்டான்."

இது வித்த உணர்வினரான பிளேட்டோவின் உரை. இப்பொன்னுரையைப் போற்றிக்கொள்ளுதல் நல்வாழ்க்கையின் பால் நாட்ட முடைய மேன்மக்களின் காரியம் ஆகும். இந்த உரையின் வழியதான வாழ்க்கை ஒரு காலத்தில் இந்திய நாட்டின் உடைமையாய் இருந்தது. வித்தகம் உடைய மேலோர் மனத்தில் பிறந்து வளர்ந்த எந்த முடிவும் இயல்வ தொன்றே. முடியாத ஒன்றை நல்லோர் மனம் நினைப்பதில்லை. பிளேட்டோ கனவாகக் கண்ட ஒரு குடிவாழ்க்கை இந்த நாட்டில் உண்மையேயாய் நிலைத்திருந்ததை எவரும் மறுக்க மாட்டார் என்றே நினைக்கின்றோம்.

பிளோட்டோ கூறிய செவ்விய நிலையை அடைய முடியுமோ என்று அயிர்ப்பதைக் காட்டிலும் நாம் ஒவ்

வொருவரும் அந்நிலையை அடையும் வண்ணம் முயல்வது நலம். அம்முயற்சி இன்பத்தை, முயற்சி அளவிலேயே தருமே. வாழ்க்கையைப் பற்றிக் கொண்டு உழக்கும் சிறுமைகள் அகலுமேல் கடவுளின் திருநடனம் எங்கும் நிகழ்வது இயல்வதொன்றே!

முற்றிற்று

---

TAMIL NADU ARCHIVES LIBRARY
10 5 1 24
MADRAS

## கூடிய சீக்கிரம் வெளிவரும்

"சமூக சித்திரம்" (சிறு கதைகள்)

By அரங்க நாயகி சீனிவாசன்

"வாழ்க இந்தியா"

By Professor. Sundaresan, M.A.

"பக்தி யோகம்"

By பரலி சு. நெல்லையப்பர்

விபரங்களுக்கு

THE

MERCANTILES LTD.,

MEERAN SAHIB STREET,

MADRAS—2.

# கலாநிலயத் தமிழ்ப் பாடம்

நல்வாழ்க்கையின் வித்து தமிழ்க்கலை நூல்களே. இராமாயணம், குறள், சிலப்பதிகாரம், கலித்தொகை, புறநானூறு போன்ற தமிழ்ப் பெருநூல்களைத் தமிழர்களே நீங்கள் படிக்கவேண்டுவது அவசியம்.

கலாநிலயத்தலைவர் கேயார் தபால் மூலம் தமிழ்ப் பாடம் அனுப்பி வருகின்றார் 15 மாதக்கால அளவில் 60 பாடங்கள். இப்பாடங்களைத் தொடர்ந்து படித்தவர் தமிழ் இலக்கண இலக்கியங்களில் நல்ல பாண்டித்தியம் பெறலாம்.

பிறகு எந்தத் தமிழ்ப் பெருநூல்களையும் பிறர் உதவியின்றித் தாமே படித்து மகிழவும், பிறருக்குப் போதிக்கவும் இயலும். எனவே, இந்தப் பாடங்களைத் தமிழ் நாட்டார் உபயோகப் படுத்திக் கொள்வது அவசியம்.

தமிழ்ப் பேசவும் எழுதவும் தெரிந்தவர் இப்பாடங்களைப் படிக்கலாம். ஆண் பெண் இரு பாலரும் ஓய்வு நேரங்களில் படித்துப் பாண்டித்தியம் பெறுவதற்கு இப் பாடம் உதவும்.

முழுப்பாடத்திற்கும் கட்டணம் ரூ 25-0-0

இரண்டு தடவையாகக் கட்டுவதானால் தடவைக்கு ரூ. 15-0-0 வீதம் ரூ. 30-0-0

விபரத்திற்கு உடனே எழுதவும். கட்டணம் எப்பொழுதும் முன் பணமாகக் கட்டவேண்டும்.

**கலாநிலயம்**

43, ஜெனரல் முத்தையா முதலி தெரு,
ஜி. டி. மதராஸ்–1.

REPRESENT & INSURE WITH

# Vasant Insurance Company Ltd.

**26A SIR PHEROZSHAH MEHTA ROAD**
**Fort. BOMBAY.**

| | |
|---|---|
| Authorised Capital | 10,00,000 |
| Paid up Capital | 5,00.000 |
| Business exceeds | 1,75,00,000 |
| Lite Fund exceeds | 10,00.000 |

*FOR AGENCY & OTHER TERMS APPLY TO :*

## THE MERCANTILES LIMITED

**CHIEF AGENTS FOR SOUTH INDIA**

**MEERAN SAHIB STREET,**

**MADRAS. 2.**